SRI LANKA MUSLIM CONGRESS
COLOMBO


# திசை

THISAI

திசை 1 | 8-9-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 35



உள்ளே....

- பண்டா — செல்வா ஒப்பந்தம் ; ஜி.ஜி. யின் சதி
- உருளும் இலங்கை
- நடிப்புச் சுதேசிகள்
- சோழப் பேரரசில் கிளர்ச்சிகளும் அடக்கு முறைகளும்
- மூன்ரும் உலகில் அபிவிருத்தியும் சூழலும்
- அவுஸ்திரேலிய கிரிக்கட் அணி
- இந்திய இசைக்குயில் பற்றி...,
- சிறுகதை; கவிதை; நெளிவு சுழிவு.


# இடைக்கால அரசு அமைப்பதை பிரேமா நிராகரிப்பார்

## ஜே. வி. பிக்கு எதிராக கடும் நடவடிக்கை

**இடைக்கால அரசமைப்பதற்கான யோசனையை பிரேமதாஸ நிராகரிப்பார் என கொழும்பு வட்டாரங்கள் நம்பகமாகத் தெரிவிக்கின்றன.**

**ஜனதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு பிரதம மந்திரி தலைமையில் ஓர் இடைக்கால அரசை அமைக்க வேண்டுமென ஐந்து எதிர்க்கட்சிகள் கூட்டாக வேண்டியுள்ளமை அனைவரும் அறிந்ததே.**

எதிர்க்கட்சியினரும், ஐ. தே. க. வுக்குள் உள்ள சிலரும், சில வெளிநாட்டுச் சக்திகளும் சேர்ந்து பிரேமதாஸ அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு மேற்கொள்ளும் ஒருமுயற்சியே இதுவென்றும் எனவே இதனை அவர் உறுதியாக நிராகரிப்பார் எனவும் நம்பகமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் பிரேமதாஸ் ஆயுதப் படையினருக்கு நேற்றுப் பிறப்பித்த விசேட கட்டளை பல விடயங்களை எமக்கு முன்னுணர்த்தும் வகையிலும், மேற்படி செய்தியை ஊர்ஜிதப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. அக்கட்டளைப்படி தீவிரவாதிகளுக்கு எதிராகவும், நாட்டில் குழப்பம் விளைவிப்பவர்களுக்கு எதிராகவும் கடுமையாகவும் உறுதியாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கூறியுள்ளார்.

ஜே.வி.பி. யின் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பை பிரேமா கோரும்போது, அக்கிளர்ச்சியைச் சாட்டாகவைத்து எதிர்க்கட்சிகள் அவரைக் கவிழ்க்கவே முயல்வதாகவும், எனவே ஜே. வி.பி.க்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுப்பதன்மூலம் இச் சக்திகளுக்குத் தக்கபாடம் புகட்ட வேண்டுமென அவர் எண்ணுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே.வி.பி. க்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாரபட்சங்கள் நீக்கப்பட வேண்டும்

சாவகச்சேரியில் நடைபெற்ற சுகாதாரத் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் ஈழத்தொழிற்சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி கூறியதாவது:

இந்த நாட்டின் நல்வாழ்வுக்காகவும், மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகவும் பாடுபட்ட சுகாதாரத்தொழிலாளரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய காக்கி உடைகள் இன்று போலிக்காரணங்கள் காட்டி கொடுபடாதுள்ளன. மூதூர், திருமலைப் பகுதி வாழ் சுகாதாரத்தொழிலாளர் மலசலகூடம், வீடு, மின்சாரம், தண்ணீர், போன்ற வசதிகள் அற்றுத் திண்டாடுகின்றனர். மேலும் அவர்கள் இந்திய வம்சாவழியினர் என்ற காரணம் காட்டி நிரந்தர வேலை வழங்கப்படாமல் ஏமாற்றப்படுகின்றனர். இப்பாரபட்சங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### மீனுக்குள் மனித விரல்

கொழும்பு, நீர்கொழும்பு, களுத்துறைப் பகுதிகளில் மீன் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. காரணம் மனிதனல் உண்ணப்படும் மீன்கள் தற்போது மனிதர்களையே உணவாகக் கொள்ளத் தொடங்கியுள்ளதே. ராணுவத்தால் சுடப்பட்டு களுகங்கை, களனி கங்கையில் நாளாந்தம் தள்ளப்படும் பெருவாரியான இளைஞர்கள் இப்பகுதிக் கடல்களோடு சங்கமமாவதால் இப்பகுதிக் கடல்களில் வாழும் மீன்கள் இவற்றை உண்கின்றன. இதனல் இங்கு பிடிக்கப்படும் மீன்களை மக்கள் வாங்குவதற்குத் தயங்குகிருர்கள். அண்மையில் ஒரு சிங்களக் குடியானவர் வாங்கிய சூம்பளா மீன் ஒன்றிற்குள் ஒரு மனிதச் சின்னவிரல் காணப்பட்டதாகவும் அதன் பின்னர் அவர் மீன் வாங்குவதையே நிறுத்திவிட்டதாகவும் செய்தி வந்துள்ளது.

### பயந்து பயந்து வேலை

திரைப்பட நடிகர்கள்போல் தம்மை கற்பனை பண்ணிக் கொண்டு ரூபவாஹினி தொலைக்காட்சி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவற்றில் வேலைபார்த்து வந்த ஊழியர்கள், ஜே. வி. பியின் அச்சுறுத்தலுக்குப்பின் தாம் அங்கு வேலை செய்பவர்கள் என்பதைப் பிரஸ்தாபிப்பதற்கு அஞ்சுவதோடு, வேலைமுடிந்ததும் தமது ஸ்தாபனங்கள் இருக்கும் வீதியில் நின்று பஸ் எடுப்பதற்கும் அஞ்சி ஓட்டோவில் போய் வேறிடங்களில் நின்றே பஸ் எடுக்கிருர்களாம்.

### பாகிஸ்தானைக் காணவில்லை

மேலும் இக் கூட்டுத்தாபனங்களில் உரியவர்கள் வேலைக்குப் போகாததால் அவ்விடங்களுக்குள் அரச படையினரின் ஆட்கள் புகுந்து அவ்வேலைகளை மேற்கொண்டுள்ளதால், இவர்களிடம் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளும் அகப்பட்டு பெரும் சித்திரவதைக்குள்ளாகின்றன. இவர்கள் செய்திகள் வாசிக்கும்போது அடிக்கடி 'மன்னிக்கவும்' என்ற வார்த்தையைப் பாவிக்கின்றனர். சிக்கல் ஏற்பட்டதும் தமது 'கையில் மடியில்' வைத்திருப்பவற்றை போட்டும் நிரப்புகின்றனர். அண்மையில் "பாகிஸ்தான் எயாலைன் விமானத்தைக் காணவில்லை" என்பதற்குப் பதிலாக "பகிஸ்தானைக் காணவில்லை" என்றும் செய்தி வாசித்துள்ளனர்!

## ஜே. வி. பி யின் தவருன தந்திரோபாயம்

ஜே. வி. பி. யினர் தமது பன்முகப்பட்ட ராணுவ அரசியல் நடவடிக்கைகள் மூலம் பிரேமதாஸவின் அரசை ஆட்டங்காணச் செய்ததோடு, தமது பலத்தையும் அதிகாரத்தையும் மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து வந்தனர் என்பது வெளிப்படை.

ஆனல் அண்மைக்காலத்தில் அவர்கள் தமது யுத்த தந்திரோபாயமாக ராணுவ வீரர்களின் குடும்பங்களையே அழிக்கத் தொடங்கியதான செயல், அவர்களுக்கு பலத்த எதிர்ப்பொன்றைக் கிளறிவிட்டுள்ளது.

காலப்போக்கில் இயல்பாகவே ஜே. வி. பி யின் பக்கம் சாயவிருந்த ராணுவத்தினரை ஜே. வி. பி. யின் இச்செயலானது மேலும் அரசோடு ஒட்டிக்கொள்ளச் செய்துள்ளதோடு, வெகுவிரைவில் அவர்களை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற உக்கிரப் போக்கையும் தந்துள்ளது.

## ஒற்றுமையைக் குலைக்க ஆயுதப் பயிற்சி

தான் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலுள்ள அரபுமக்கள் சிலருக்கு ஆயுதப் பயிற்சியினை இஸ்ரேல் கொடுத்துவருகிறது.

மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே ஆயுதப் பயிற்சி கொடுத்து, பின்னர் ஆயுதங்களையும் கொடுக்கிருேம் என இஸ்ரேல் சொல்கிறது.

ஆனல், அரபுமக்கள் மத்தியிலுள்ள ஒற்றுமையைச் சிதறடிக்க இஸ்ரேல் கையாளும் தந்திரமே இதுவென, அரபு மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

## இலங்கையின் பொருளாதார நெருக்கடி?

உலகவங்கியின் கட்டளையை ஏற்று இன்று இலங்கை அரசு தனது நாணய மதிப்பைக் குறைக்க முன்வந்துள்ளது. இலங்கை அரசு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளதையும் அந்த நிலைக்கு இலங்கையைத் தள்ளியது, யு. என். பி. யின் இரண்டு முக்கிய அமைச்சர்களாக விளங்கிய காமினி திஸநாயக்காவும் லலித் அத்துலத் முதலியும் என்று அண்மையில் சில அரசியல் அவதானிகளால் கணிக்கப்பட்டுள்ளது.

காமினி, இலங்கையின் சுதேசிய விவசாயத்துக்குப் பொருத்தமான குளங்களைப் புனர்நிர்மாணம் செய்வதை விட்டு அமெரிக்க ஆலோசனைப்படி நமது நாட்டுக்கு ஒத்துவராத பெருந்திட்ட மகாவலி நிர்மாணவேலைகளால் பணத்தை விரயம்செய்தது நாட்டை பெரிய அளவில் பாதித்துள்ளது. இதற்கேற்ப ராணுவத் தீர்வே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு வழியெனகோடிக் கணக்கான செலவில் ஆயுதக் கொள்வனவில் லலித் ஈடுபட்டது, இலங்கைப் பொருளாதாரத்துக்கு அடுத்த பெரிய அடியாகும். மகாவலித்திட்டத்தில் வேலை செய்யும் அமெரிக்க பொறியியலாளர் மாதம் 80,000ரூபாவைச் சம்பளமாகப் பெறும் அதேவேளையில், இதே வேலை செய்யும் இலங்கையர் இதே வேலைக்கு 3000 ரூபாவைப் பெறுகிருர் என்பதின் மூலம், நமது மகாவலித் திட்டங்களால் பயன் பெறும நாடும் நிபுணர்களும் யார் என்றும் அறியலாம்.

**திசை** THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு.
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# பனம் பழத்தில் சாராயம்: தேவைதானா?

"பனம் பழத்திலிருந்து சாராய உற்பத்தி" இப்படி ஒரு செய்தி. "யாழ்ப்பாணத்தில் பனங்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி" இப்படியும் ஒரு செய்தி.

உணவுத் தட்டுப்பாட்டின் போது, நெருக்கடிகளின்போது கைகொடுத்த பனங்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி காணவும், உணவுப் பொருள்களாக உதவும் பனம்பழத்திலிருந்து சாராயம் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சி தேவைதானா?

ஆராய்ச்சிகள் அவசியமானவை: அவற்றின் பயன்பாடு அதைவிட முக்கியம். ஆராய்ச்சிகள் எப்போதும் மக்களின் உணவு ஆதாரத்திற்கு முதன்மை கொடுக்க வேண்டும். ஜேர்மனிய ஆராய்ச்சியாளர்கள் பனம் பழம் பல்வகை ஊட்டச்சத்துகள் நிரம்பியதெனக் கண்டுபிடித்ததாக பனம் பொருள் அபிவிருத்திச்சபை முன்பு அறிவித்தது. இப்போது அதே சபை பனம்பழத்திலிருந்து சாராய உற்பத்தி செய்யலாம் என்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்டிருக்கிறது. ஊட்டச்சத்துகள் எல்லாம் சாராய வடிவில் வந்துவிடும் என்ற கண்டுபிடிப்பும் இருக்குமோ? என்ன முரண்பாடு நெருக்கடிகளின் போது கைகொடுக்கும் பனம் பழத்திற்கு இப்படியொரு நெருக்கடி.

சீனி விலையேறிவிட்டது: மா விலையேறிவிட்டது. இவற்றுக்குப் பதிலீடாக இருக்கவே இருக்கிறது பனம் பொருள்கள். இவற்றின் உற்பத்தி பெருகி பாவனையும் பெருகப் பல்வகை ஆராய்ச்சியும் பிரசாரமும் அவசியம். அதனால் தமிழீழத் தேசிய பொருளாதாரம் பனை போலத் தலைநிமிரும். எப்போதும் எமதுணவு ஆதாரத்திற்கு ஆதாரமாயுள்ள பனம் பொருளை உணவாகத் தருவதற்கு மட்டுமே முன்னுரிமை வழங்க அபிவிருத்திச் சபை முன்வரவேண்டும்.

எமது மக்களும், நெருக்கடி வளர்ந்தே செல்லும் இக்காலகட்டத்திலேனும் பனம் பொருள் பாவனையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். பனை நடுகையையும் தீவிரப்படுத்தவும் வேண்டும். என்னதான் அந்நிய மோகத்தில் அலைந்தாலும் எமக்குரிய "பனங்கொட்டை" என்ற பெயர் எம்மோடு ஒட்டிக் கொண்டிருக்கவே செய்யும். அதைப்போல பனம் பொருளின் உபயோகமும், எம்மோடு ஒட்டிக் கொள்ளட்டும்.

க.வி.
புங்குடுதீவு.



## ஓசைகள்

### ஓசியில் படிக்கவே விரும்புகிறார்கள். . . .

திசையில் நீலாம்பரன் எழுதிய தூவானத்தில் ஈழத்து வெளியீடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். சஞ்சிகைகள், நூல்கள் ஆயிரம் பிரதிகளைத் தாண்டாத நிலைமையை அழகாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

தென்னிந்திய சஞ்சிகைகளை விலை கொடுத்து வாங்கும் நம்மவர்கள் இலங்கைச் சஞ்சிகைகளை இலவசமாகவே வாங்கிப் படிக்க விரும்புகிறார்கள். வீடியோ திரைப்படப் பிரதியை தினக்கூலி ரூபா 15 வீதம் வாங்கி வீட்டில் போட்டு ரசிப்பவர்கள் தேசிய பத்திரிகைகளை 'ஓசி'யில் வாங்கிப் படிக்கவே ஆசைப்படுகிறார்கள்.

இன்று நம்மகத்துக் கலை, இலக்கியப் பணிக்குக் காத்திரமான பணிகளைச் செய்து வரும் திசை வடபகுதி, மற்றும் பிரதேசங்களில் வரும் இலக்கிய சஞ்சிகைகளைப் பற்றி உதாரணமாக உள்ளம், மல்லிகை, அலை மட்டுநகரில் வரும் முனைப்பு, தொண்டன், மற்றும் கொழுந்து போன்ற சஞ்சிகைகளை விருப்பு வெறுப்பின்றி நடுநிலை நின்று இலக்கியச் சுவைஞர்களுக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் காத்திரமான விமர்சனம் ஒன்றைச் செய்தால் அது பயனுள்ள பணியாக அமையும். இதனை நீலாம்பரனாவது செய்வார் என எதிர்பார்க்கிறேன்.

அந்தனி ஜீவா
ஆசிரியர் – 'கொழுந்து'
கொழும்பு.

### திசையின் ஓசைகள் மறையாது

திசை சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் அருமையான சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அன்று நடைபெற்ற சொற்பொழிவுகளைச் செவியுற்ற பின்னர் திசையின் மேல் எனக்கேற்பட்டிருந்த நல்லபிப்பிராயம் மேலும் அதிகரித்தது. பல்வேறுபட்ட பெரிய எழுத்தாளர்களின் முன் "சூரியனின் முன் நின்ற மின்மினியின் நிலை போல" நானும் அக்கூட்டத்தில் கலந்தது என்னைப் பெருமிதமடைய வைத்தது.

'திசை' எழுப்பிய 'ஓசை'கள் இன்றும், என்றும் மக்கள் மனதை விட்டு அகலக் கூடியவை அல்ல. திக்கெட்டிலும் பரவியிருக்கும் ரசிகர்களை, முக்கியமாக தமிழர்களை ஒன்று சேர்க்கும் கருவியாகவும் அவர்களிற்கு நல்ல திசையைக் காட்டும் சாதனமாகவும் திசை விளங்குமென்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

செல்வி. மைதிலி அருளையா
யாழ்ப்பாணம்.

### பழசுகளுக்கு தலை அடி

தங்களின் கலசமாகிய 'திசை' யைச் சுவைப்பவர்களில் நானும் ஒருவன். பல அம்சங்களும் திகழும் திசை பல்கிப்பெருகி வளர எனது ஆசிகள். மேலும், தங்களின் 'திசை முகம்' ரொம்பப் பிரமாதம். மற்றும், சு. வில்வரத்தினம் எழுதிய விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் பற்றியது புகழ் பரப்பும் பழசுகளுக்கு ஒரு தலை அடியாக இருக்கிறது. மிகவும் தெளிவாக 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' அழகாகச் சொல்லியிருக்கிறார்.

த. ஜெயகணேஷன்
புன்னாலைக்கட்டுவன்.

# யாழ். மாநகரசபை நூலகச் சேவை

யாழ். மாநகரசபையின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் ஆறு நூலகச் சேவைக் கிளைகள் செயற்பட்டு வருகின்றன. நாவாந்துறையில் படிப்பகம் ஒன்றும் யாழ். மாநகரசபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நூலகங்களில் ருக்கைகள், மேசை – கதிரைகள் பற்றாக்குறைவாகவே உள்ளன. நூல்களும் தேவைக் கேற்றவாறு இல்லை. குருநகர் நூலகத்தில் தண்ணீருக்கே அருந்தல். இந் நூலகத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் இலவசமாக அனுப்பும் இதழ்களைத் தவிர வேறு சஞ்சிகைகள் கிடையாது.

தற்போது மாநகரசபை ஆணையாளர் மேற்கொண்ட நடவடிக்கையினால் நூலகத்துறைசார்ந்த நிபுணரான கலாநிதி ஈ. வே. பாக்கியநாதனின் சேவையை யாழ். மாநகரசபை நூலகப் பகுதி பெற்றுள்ளது. இவர் ஏலவே 1964 — 1968 காலப்பகுதியில் யாழ். பொது நூலகத்தில் நூலகராகக் கடமையாற்றியவர்.


ஜி.சி.ஈ சாதாரண/உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவைகளுக்கும் பயன்படும் வகையில் பாடநூல்களையும், உசாத்துணை நூல்களையும், தமிழ் மொழியிலான அறிவியல் நூல்களையும் நூலகச் சேவைக் கிளைகளில் சேர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தவிரவும் யாழ். நூலகத்தை ஸ்ரீலங்கா காவற்படையினர் எரித்த சமயம் 'இலங்கைப் பிரிவும்' எரிந்து சாம்பராகி விட்டது. இப்பிரிவை மீளமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை தொடர்பான நூல்கள் வைத்திருப்பவர்கள் தந்துதவுமாறும் நூலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஆயுதக் கலாசாரத்தின் மூலவர்கள் யார்?

இலங்கையில் இன்று ஓர் ஆயுதக் கலாசாரம் வந்துவிட்டது. ஆயுதம் எங்கு தான் ஓங்குகிறதோ அங்கு தனது தீர்மானத்தை, துப்பாக்கிக் குழலுக்கூடாய் மக்களின் மண்டைக்குள் திணிக்கிறது. மக்கள் எதனை ஆதரிக்கின்றனர்? எதனை விரும்புகின்றனர் என்பதை சற்றும் மதியாது தமது விருப்பங்களைத் திணிக்கின்றனர்.

இங்கு இந்த ஆயுதக் கலாசாரமும் யுத்தப் பிரபுத்துவமும் தோன்றியது எப்படி? தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு என்று தீர்வு காண மறுக்கப்பட்டதோ, அன்றே ஆயுதக் கலாசாரம் கருக் கொள்ளத் தொடங்கியது. இந்தக் கலாசாரக் குழந்தையின் தாயும் தந்தையும் ஐ. தே. க. வும், எஸ். எல். எவ். பி. யும்தான்.



யாழ். கல்விப் பணிப்பாளரின் நிர்வாக எல்லைக்குள் அமைந்த பாடசாலைக் கொத்தணியமைப்பு ஒன்றில் காலை ஊன்றிய எட்டு அதிபர்கள் முக்கியமான வேலையாக ஏலவே இருந்த கொத்தணியின் பெயரை மாற்றியமைக்க ஏகமனதாக முடிவெடுத்துள்ளனர். ஏகமனதான தீர்மானம்தான் என்றாலும் தலைகளை எண்ணுவதுதான் ஜனநாயகமோ? தலைகளை உடைப்பதும் ஜனநாயகமாகாது. ஜாதகம் பார்த்துச் சரியான பொருத்தத்தின் பின் தீர்மானித்தார்களோ என்னவோ, எண் சோதிடத்தில் 8 உயர்த்தினால் உயர்த்தும், வீழ்த்தினால் வீழ்த்தும் என்று பொது ஜனம் அப்பாவியாகச் சொல்லாடுகிறார்கள்.

இக் கொத்தணி அமைப்பில் இருந்து ஒரு பகுதியைப் பிரித்து தனித்தியங்கலாம் என்று ஓடியாடித்திரிந்த ஒருவர்தான், பெயர் மாற்றத்தின் சூத்திரதாரியாம். தவிரவும், பெயர் மாற்றம் என்ற சூதின் பகைப்புலத்தில் முனைப்பாக நிற்பது சாதியும் சமயமும்தான் என்று, பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து மௌனியாகக் கைதூக்கியவர்கள் மனதில் குமைந்து கிடந்தஆத்திரமோ, எதுவோ, 'கையால் ஆகாமல்' வெளியிடங்களில் சுருதிபேதமாகப் பேசுகிறார்கள். பெயர் மாற்றம் வெற்றி தருமா என்பது கேள்விக் குறிதான். எதற்கும் மேலிடம்— நிர்வாகம்— கடத்தினால் ஹர ஹர மகாதேவா என்று இருக்க வேண்டியதுதான்.

"இருந்த பெயர் மனம், மொழி, மெய்களால் ஒத்துக் கொள்ளப்பட்ட பெயர். இது ஒரு பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்கிறது...... சீரான படிப்பில்லை. முதல் வேலையாக ஏன் இந்தப்பெயர் மாற்றம்?" — இப்படியும் பெற்றோரும், நலன்விரும்பிகளும் அங்கலாய்க்கின்றனர். பெயர் மாற்றம் வெற்றிபெற்றால், இது ஒரு முன்மாதிரியாக அமைந்து நல்லூர்க் கொத்தணி, வண்ணார்பண்ணைக் கொத்தணி என்று மாறினாலும் வியப்பில்லை நாளடைவில் கொத்தணி அமைப்புகளின் பெயர்கள் தலைகீழாகவும் மாறும். இதனால் ஊரே குழம்பலாம். யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் விளையாட்டிலும் கல்வியிலும் பெயர்போன பாடசாலை ஒன்றின் கட்டிடத்துக்கும் பெயர் சூட்டப்போய் ஊரே குழம்பி, பள்ளிக்கூடம் இரண்டு பட்டது: இன்றும் அங்கு மழைவிட்டும் தூவானம் ஆறவில்லை. எது எப்படியாயினும், "பெயரில் என்ன இருக்கிறது?" (What's in a name?) என்று உலக மகாகவி ஷேக்ஷ்பியரே கையை விரிக்கிறார்! □

நக்கீரன்

# பண்டா - செல்வா ஒப்பந்தம்

# ஜி. ஜி. யின் சதி

ரி. ஜி. எல்.

பௌத்த - சிங்கள இனவாதிகளின் தூண்டுதலாலும், கிளர்ச்சிகளாலும் தான் பண்டா — செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது என்பது உண்மை. ஆனால் அதேவேளை இவ் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டுமென்று தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் ஒரு சக்தி விரும்பியது. அச்சக்தி ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் கொங்கிரஸ் ஆகும்.

தென் இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் இவ் ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு கிளர்ச்சிகளைத் தூண்டியவர், ஜே. ஆர். ஜயவர்த்தனா. இவ்வாறு ஜே.ஆர். முயன்றமைக்கு இரண்டு காரணங்கள் அடிப்படையில் இருந்துள்ளன. ஒன்று, பண்டார நாயக்காவின் ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்பதற்கான கிளர்ச்சிகளைத் தூண்டுவதற்கு இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தவேண்டுமென்பது. இரண்டாவது, சமஷ்டியை ஒத்த அமைப்பு முறைமை தமிழரின் தேசிய தனித்துவத்தை வளர்த்துவிடும் என்பதனால் அதனைக் கிழிக்க விரும்பினார்.

1930 களின் மத்தியிலிருந்து 1950 களின் மத்திவரை, தமிழ் மக்களின் தன்னிகரில்லாத் தலைவராய் இருந்தவர் ஜி. ஜி. பொன்னம்பலம். இக்காலத்தில் பொன்னம்பலத்தின் தலைமையில் செயல்பட்ட ஒருவரே எஸ். ஜே. வி. செல்வநாயகம். ஆனால் 1949ஆம் ஆண்டு எஸ். ஜே.வி. கொங்கிரஸில் இருந்து பிரிந்து சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் அரசுக்கட்சியை ஸ்தாபித்தார். இக்கட்சி 1952 தேர்தலில் இரண்டு (2) ஆசனங்களை மட்டுமே பெற்றது. ஆனால் 1956 ஆம் ஆண்டு தேர்தலில் இது 10 ஆசனங்களைப் பெற கொங்கிரஸ் 2 ஆசனங்களையே பெற முடிந்தது. இதனால் எஸ்.ஜே. வி. தமிழ்மக்களின் தலைவராகவும், ஜி. ஜி. தமிழ் மக்களால் கைவிடப்பட்டு புறம் தள்ளப்பட்டவராகவும் காணப்படுகின்றார்.

எஸ்.ஜே.வி.சமஷ்டிக் கொள்கையின் பிரகாரம் 1957ஆம் ஆண்டு பிராந்திய சபைகள் பற்றிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இவ் ஒப்பந்தத்தைத் தோற்கடிக்கவேண்டுமென்பது ஜி.ஜி. யின் பேரவா. இவ் ஒப்பந்தத்துக்கு எதிரான கருத்துக்களை ஜி. ஜி. அவ்வப்போது வெளியிட்டார். பிற்காலத்தில் அவர்களது வெளியீடுகளும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முழுக்க முழுக்க நிராகரித்தன. முறையே 1967 1968 காலப்பகுதியில் வெளியிடப்பட்ட கட்சியின் 22ஆவது 23ஆவது மகாநாட்டு மலர்கள் இவற்றுக்குச் சான்று பகர்கின்றன.

இவற்றின் பின்னணியில் பண்டா — செல்வா ஒப்பந்தத்தைச் சற்று நோக்குவோம். இவ் ஒப்பந்தம் நிறைவேறினால், ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தன்னால் தீர்வு காண முடியாதவிடத்து, செல்வநாயகத்தின் தலைமையில் இவ் ஒப்பந்தத்தின் வாயிலாக தீர்வு கண்டதாக வரலாறு அமைந்துவிடக்கூடாது என்பதே, ஜி ஜி. யின் நோக்கமாகும். எனவே இவர் இவ் ஒப்பந்தத்தைக் குழப்புவதில் ஆழ்ந்தவிருப்பம் கொண்டவர். ஆனால் செல்வநாயகத்தின் தலைமையினைத் தன்னால் இனி வீழ்த்த முடியாதுஎன, ஜி. ஜி. உணர்ந்திருக்கக் கூடும். ஆயினும் செல்வநாயகத்தின் தலைமையில் பிரச்சினைக்கான தீர்வு ஏற்படக் கூடாது என்பது, இவரது அடிப்படை எண்ணமாகும்.

ஒப்பந்தத்தைக் குழப்புவதில் ஜே.ஆர். தென் இலங்கை மக்களைப் பல்வேறு வழிகளில் தூண்டிக்கொண்டிருந்த வேளையில், யாழ்ப்பாணத்துக்கு சிங்கள 'ஸ்ரீ' பதித்த பஸ் வண்டிகள் அனுப்பப்பட்டன. இது 1957 ஜனவரி நடுப் பகுதியில் அதற்கு எதிரான போராட்டத்தைத் தோற்றுவிக்கிறது. அப்போது 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்தை கொங்கிரஸின் வாலிப முன்னணி நடாத்த இருப்பதாக, செய்தி பரவியது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணிக்குத் தலைவராய் இருந்த அமிர்தலிங்கம் இப்பிரச்சினையை மறுவளமாகச் சிந்தித்தார். அதாவது கொங்கிரசின் வாலிப முன்னணி போராட்டத்தை முன்னெடுத்து தமிழரிடையே பிரபல்யத்தைத் தேடமுன்பு, தமிழரசுக் கட்சியே இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டுமென விரும்பினார். இதனால் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினர் 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். இதற்கு அமிர் தலைமை தாங்கினார். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கிளர்ச்சிகள் தோன்றின. இக்கிளர்ச்சி வட பகுதியில் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்ற தலைவர்கள் கொழும்பிலிருந்தனர். அப்போது செல்வநாயகம் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கத்தை அனுப்பி நிலைமையை விசாரித்து அறியுமாறு பணித்தார். யாழ்ப்பாணம் வந்த வன்னியசிங்கம் இந்த மக்களின் போராட்ட எழுச்சியுடன் இணைந்து, அந்த அலையால் அள்ளுப்பட்டு, தானும் அக்கிளர்ச்சியில் கலந்துகொண்டு வழிநடத்தினார்.

தென் இலங்கையில் இவ் ஒப்பந்தத்தின் பங்குதாரரான தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் கனன்று கொண்டிருந்த போக்குக்கு, யு.என்.பி மேலும் பிரசாரத்தைத் தூண்டிவிட வாய்ப்பு ஏற்பட்டது. 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சியைத் தலைமை தாங்கத் தூண்டவேண்டுமெனவும், அதன் மூலம் ஒப்பந்தத்துக்கான எதிர் நிலையைச் சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்து விட வேண்டுமென்பதுமே, ஜி. ஜி.யின் உள்நோக்கமாக இருந்தது. அதற்காகவே கொங்கிரஸ் 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்வதான கதை பரப்பப்பட்டது. அதன்படி அமிர்தலிங்கம் பொன்னம்பலத்தின் நோக்குக்கு இரையாகிச் செயல்பட்டார் என்றும், கருத இடமுண்டு.

உண்மையில் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது சிங்கள இனவாத சக்தி என்பதில், எந்த விதவாதப்பிரதிவாதத்துக்கும் இடம் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு எதிரான சதிகார சக்தி இருந்தது எனவும், அதற்கு அமிர் பலியானார் என்பதையும், நாம் கணக்கில் எடுக்கத் தவறக் கூடாது. முக்கியமாக நோக்கப்பட வேண்டியது என்னவென்றால், வெறுமனே தலைமைத்துவ வெறிக்கு ஊடாகவே, தமிழ் மக்களின் பிரச்சினைத்தீர்வு காலங்காலமாக தோற்கடிக்கப்பட்டு வந்தது என்பதையே இச்சம்பவம் கோடிட்டுக் காட்டுகிறது. □

## அவுஸ்திரேலிய அணியின்

# வீழ்ச்சியும் எழுச்சியும்

வி. வாகீஸ்வரன்

கிரிக்கட் விளையாட்டின் பிறப்பிடங்களில் ஒன்றான அவுஸ்திரேலியா கடந்த சில காலமாக மிகவும் பின்னணியிலிருந்து இப்போது ஒரு சிறந்த அணியாக மிளிர்ந்திருப்பது, ஆஸி (அவுஸ்திரேலிய) ரசிகர்களை மட்டுமல்லாது உலகெங்கணும் உள்ள கிரிக்கட் ரசிகர்களையும், மட்டற்ற மகிழ்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது. 70 களில் ஆஸி அணிக்கு பெருமை பல தேடித் தந்தவர்களான சிறந்த துடுப்பாட்டக்காரரும் தலைவருமான கிறேக் சாப்பல், தனது காலத்தில் அதி சிறந்த பந்து வீச்சாளரும் உயர்ந்த விக்கட் எண்ணிக்கையையும் பெற்றிருந்த டெனிஸ் லில்லி, மிகச் சிறந்த விக்கட்காப்பாளரும் தற்போது உயர் எண்ணிக்கை காட்சுகளையும் பிடித்துள்ள றொட்னி மார்ஷ் போன்றோர், ஒரே போட்டியில் ஓய்வு பெற்றனர். அதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவுக்கு சிறந்த வீரர்களைக் கொண்ட குழு சென்றது. இதனால், ஆஸி அணி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தமை கண்கூடு. பல டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் போட்டிகளில் ஆஸி அணி மிக மோசமாகத் தோற்றமை எவராலும் ஜீரணிக்க முடியாத ஒன்று.

இந்த நிலையிலும் சோர்வுறாத தெரிவுக்குழுவினரும் ஏனையோரும், தூற்றுவார் தூற்றட்டும் போற்றுவார் போற்றட்டும் என்று விமர்சனங்களை அசட்டை செய்து, அனுபவம் வாய்ந்த அணித் தலைவர் அலன் போடர் உடன் இணைந்து துடிதுடிப்பு மிக்க இளம் வீரர்களைக் கவனமாக ஆராய்ந்து எடுத்து, போதிய பயிற்சி அளித்து மிகுந்த உற்சாகமூட்டி, அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடிகோலினர். இதன்போது பலத்த எதிர்ப்புகளையும் தோல்விகளையும் கூட அவர்கள் சந்திக்க நேர்ந்தது. தலைவர் 'போடரே' ஒரு கட்டத்தில் தன்னம்பிக்கை முற்றிலும் இழந்த நிலையில் சலிப்புற்று, தான் ராஜினாமாச் செய்யப் போவதாகக் கூறினார். ஆயினும், துவண்டு விடவில்லை இவ்விளம் இடதுகைத் துடுப்பாட்டக்காரர். தானே வீரர்களுக்கு முன்னோடியாக விளங்கி ஓட்டங்களை விளாசி அடிக்கத் துவங்கினார். பொதுவாக ஆஸி அணி தோல்வி அடைவதும் போடர் சதம் பெற்றுச் சிறந்த ஆட்டக்காரராவதுமே, முடிபாக இருந்தது இதன் மூலம் உலகில் 2ஆவது அதிகூடிய எண்ணிக்கை ஓட்டங்கள் பெற்ற ஆட்டக்காரர் ஆயினார். இந்நிலையில் பிரகாசிக்காத வீரர்களைக்கூட அணியில் வைத்துக் கொண்டிருந்ததன் மூலம் அவர்களது அனுபவம், திறமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்ப்பதில் அரும்பாடுபட்டவர்களில், அணியின் முன்னாள் தலைவர் – இந்நாள் முகாமையாளர்—பொப் சிம்சனும் ஒருவர்.

உருண்டது காலச் சக்கரம். அனுபவம் வளர்ந்தது; அதிர்ஷ்டமும் கூடியது. இளையவர்களின் துடிதுடிப்புக்குக் கிடைத்த வெற்றி — உலகக் கோப்பையை ஜெயித்தமை. அவர்தம் திறமைக்குக் கிடைத்த பெருவெற்றி பழைய எதிரிகளை — கிரிக்கட் உலகின் தாயக நாட்டின் அணியை அவர்தம் சொந்த மண்ணில் மண் கவ்வச்செய்தமையாகும். மிகப்பெரிய வித்தியாசத்தில் லாவகமாக ஆஸி அணி பெற்ற பெரும் வெற்றி, மீண்டும் ஆஸி கிரிக்கட்டுலகுக்கு புது இரத்தம் பாய்வது போன்ற உணர்ச்சியைக் கொடுக்கும் என்று கூறினால், மிகையாகாது. அணி தாயகம் திரும்பும்போது அவர்களுக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்க, அவுஸ்திரேலிய மக்கள் அன்புடனும் ஆவலுடனும் காத்திருக்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் அலைகடலில் தத்தளித்த ஆஸி அணிக் கப்பலைக் கரைசேர்த்த பெருமை மிகு மாலுமி, அலன் போடர் தான்! இப்போது அவர் தொடர்ந்து 40 தடவைகளுக்கு மேல் தலைமைப்பதவி வகித்துச் சாதனை புரிந்திருக்கிறார். மிகவும் இக்கட்டான நிலையிலும் தலையைத்தாழ்த்தி, பொறுமையுடனும் பொறுப்புடனும் ஆடுவதில் அவருக்கு நிகர் அவரேதான். இவருடன் ரெறி ஓல்டமன், ஜெப் லோசன் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களும் ஓய்வு பெறும் நாள் வெகுதூரத்திலில்லை. ஆயினும் துடுப்பாட்டத்தில் அணியின் ஸ்திரத்தைக் குலைக்க பல்லாண்டு காலம் செல்லும் எனலாம். போடர் தளம் அமைத்துக் கொடுத்துள்ள பாதையில் பூன், மார்ஷ், ரெயிலர், ஜோன்ஸ், வோ, மூடி, என்று பட்டியல் தொடர்கிறது. அணியின் எதிர்கால அவசரத்தேவை ஒருதரமான சுழல் பந்து வீச்சாளரே. மேற்கிந்திய அணியை மீண்டும் அணித்தலைவரே தனது பகுதிநேரச் சுழல் பந்து வீச்சின் மூலம் கட்டுப்பட வைத்ததை, இங்கு நினைவுகூரலாம். இந்திய பாகிஸ்தான் மண்ணில் வெற்றிபெற வேண்டின் ஓர் இளம் சுழல் பந்து வீச்சாளர் உருவாக வேண்டும்.

இன்னல்களை அனுபவித்து வரும் இலங்கை, இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு அவுஸ்திரேலிய அணியின் ஆட்டமும் தெரிவும் சிறந்த படிப்பினையை ஊட்டியிருக்கும் என எண்ண இடமுண்டு நெடுங்காலத்திட்டமாகஅணியைத் தெரிவு செய்வதில் உள்ள ஆபத்துக்களையும், எதிர்ப்புகளையும் சமாளித்து விளையாட்டின் தரத்தை உயர்த்த தெரிவுக்குழு அதிகாரிகள் முன்வர வேண்டும். வெறும் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு பத்திரிகையாளர்கள் செய்யும் விமர்சனங்களை ஒரு பொருட்டாக மதிக்காது உச்சஸ்தானத்தை அடைந்ததற்கு, அவுஸ்திரேலிய அணி ஒரு நல்ல சான்று. □

# வளர்ந்தோர் கல்வியும் திறந்த பாடசாலையும்

சி.எஸ். சுப்பிரமணியம்

உலகத்திலுள்ள சகல வளர்ந்தோர்களில் பெரும்பாலானோருக்கு வளர்ந்தோர் கல்வி, இழந்த அடிப்படைக் கல்விக்கு ஒரு பிரதிநிதிக்கல்வியாக அமைகிறது. முற்றுன கல்வியைப் பெறுத தனிப்பட்டவர்களில் அநேகருக்கு இக்கல்வி ஆரம்பகல்வி அல்லது தொழிற்கல்வியை ஓரளவு பூர்த்தி செய்வதாக அமைகின்றது. அவர்களில் சுற்றுடல் எதை எதிர்பார்க்கின்றதோ அதற்கு ஏற்றவாறு உதவியளிப்பதால், இது தொடர்ச்சியான கல்வியாக மாறுகின்றது. உயர்ந்த நிலைப்பயிற்சி பெற்றவர்களுக்கு தங்களுடைய விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொடர்ந்து பயிற்சியைப் பெற்று முன்னேற உதவுகின்றது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அபிவிருத்திக்கு அடிகோலி அத்திவாரமாக அமைந்து தனது வாழ்க்கையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு வழிகாட்டியாகவுள்ளது. சிறுபான்மையோருக்கான கலாசார கல்வியாகவோ அடிப்படை மட்டத்திற்குரிய கல்வியாகவோ ஒரு சமூகத்தின் சிறிய தொழிற்பாடமாகவோ அமையாது, கல்வித்திட்டங்களிலும் கொள்கைகளிலும் வரவு செலவுத் திட்டத்திலும் சேர்க்கப்படவேண்டிய விடயமாகும். திட்டவட்டமாக ஆராயுமிடத்து பாடசாலையில் போதிக்கப்படும் கல்வியும், பாடசாலைக்கு வெளியே போதிக்கப்படும் கல்வியும், மிகவும் உறுதியாக இணைக்கப்படல் வேண்டும். ஒரு நாட்டின் கல்வி சம்பந்தமான திட்டங்களும் கொள்கைகளும் பாடசாலைகளிலும், பாடசாலைக்கு வெளியேயும் அனுவசியமான தலையீடின்றி செயற்படுத்தப்பட்டால், வளர்ந்தோர் கல்வி மிக விரைவாக அபிவிருத்தியடையக்கூடியதாக இருக்கும். கல்வி நிபுணத்துவம் வளர்ந்தோர் கல்வியை விருத்தியடையச் செய்யும். வளர்ந்தோர்கள் தொகையைக் கூட்டி அவர்களின் கல்வி நிலையை அறிந்து அதற்கேற்றவாறு உயர்தரக் கல்வி பெறக்கூடிய முறையில் ஒழுங்கு செய்யப்படுதல் வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் அம்சங்களில் ஒன்றுகஅமையும்.

## வளர்ந்தோர் கல்வி நிலையங்கள்

விசேட வளர்ந்தோர் கல்வி நிலையங்கள் நாட்டினுடைய தேவைகளுக்கேற்றவாறு ஸ்தாபிக்கப்படுவதினல் பாடசாலைக்கு வெளித் தொழிற்பாடுகளை ஒன்றிணைக்கக் கூடியதாகவிருக்கும். இக்கல்வி வளர்ந்தோர்களை திறமை வாய்ந்த குடிமகனுகவும், ஆக்கப்பாடுடையோர்களாகவும், நுகர்வோர்களாகவும், பெற்றோர்களாகவும், தனிப்பட்ட கல்வித் தொழிற்பாடுகளையும் சமுதாய கல்வித்தொழிற்பாடுகளையும் அமைப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், ஊக்குவிக்கவும், சுயகல்வியை உற்சாகப்படுத்துவதற்கும் ஆக்கமுயற்சியை விருத்தியடைய சகல கல்வி பெறும் வழிகளை அநேகர் பயன்படுத்தும் நோக்கமாக ஒழுங்கு செய்வதற்கு திட்டமிடக்கூடிய முறையில் அமையும்.

## நோக்கம்

தொடர்ச்சியாக அல்லது ஒழுங்காக ஒரு முழுநேர அடிப்படையில் கல்வி பெறமுடியாதவர்களை ஒழுங்கு படுத்தக்கூடிய தொழிற்பாடுகளில் கூடிய செய்திகளை அறியவும், அறிவு, விளக்கம், தொழில் நுட்பம், பாராட்டு; போக்குகள் ஆகியவற்றைப் பிரித்தறியவும் தனிப்பட்ட பிரச்சினைகளையும், சமூகப்பிரச்சினைகளையும் விடுவிக்கக்கூடிய முறையில் ஊக்கப்படுத்தும் ஆண்களினதும், பெண்களினதும், வாழ்நாள் பூராவுமான பொறுப்புக்களையும் சமுதாய வளர்ச்சிக்கேற்றவாறு மாற்றக்கூடிய தங்கள் நிலைகளையும், தங்கள் அறிவைக் கொண்டு விளங்கிக்கொள்ளக் கூடிய வித்தியாசமான தரங்களின் தேவைகளையும், சுற்றுடலுக்கேற்றவாறு மாறுபாடடையக்கூடிய பங்களையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்குத் தேவையான நானுவித கல்வி அநுபவங்களை ஒருங்கிணைக்கக் கூடிய நிலையிலுள்ளது தான் வளர்ந்தோர் கல்வி ஆகும். ஒரு ஆண், பெண், இளைஞன், யுவதி, ஆகியவர்கள் தங்களுடைய வாழ்க்கையை மிகவும் பிரயோசனமாகவும், திறம்படவும் ஆக்க உதவுவதே இதன் அடிப்படை நோக்கமாகும். மனிதனின் அறியாமையைப் போக்கி. பேதமையை அகற்றி, தன்னுலியன்ற முறையில் கூடியளவு சிந்தித்து உணர்ச்சியுடன், ஆக்கபூர்வமாக, குறைகளையும் தேவைகளையும் முற்றுக அலசி ஆராய்ந்து, அதற்கேற்றவாறு சமுதாயத்தில் முக்கியமான நிலையில் பங்குபற்றும் உறுப்பினனுக உருவாக்குகின்றது.

வறுமை காரணமாகவும், பெற்றோர்களின் அறியாமை காரணமாகவும், வசதிகளின்மையாலும், முறைசார் கல்வியை பெறமுடியாதவர்களுக்கு ஒரு தொழிற்பாடான அறிவூட்டுக் கல்வியை அளிக்கக் கூடிய முறையிலும், பாடசாலையில் கல்வி பயின்று ஒரு பக்குவ நிலையையடையாது வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட இளைஞர்களுக்கு தொழிற்பாட்டு நிலையை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாற்றுநிலைக்கல்வியை அளிக்கவும், முறைசார் கல்வியை ஓரளவுக்கு பூரணப்படுத்தி வெவ்வேறு துறைகளிலீடுபாடுடையோருக்கு அடிப்படை அறிவையும், நுட்பங்களையும், ஆற்றல்களையும் விருத்தியடையச் செய்யவும், வெவ்வேறு வேலைத்துறைகளிலும் தொழில்களிலும், தொழில் நுட்ப அறிவைக் கொண்ட உயர் தொழில்களிலும், சாதாரண தொழில்களிலும் ஈடுபாடுடையோருடைய ஆற்றல்களும்நுட்பங்களும் மேல் நோக்கி வளரக்கூடிய முறையில் ஏற்ற பயிற்சி அளிக்கவும், பகிரங்க விழிப்புணர்ச்சிக் கேற்றவாறு கலாசார அழகியல் குடிமை கல்வியை அளிக்கவும் திட்டமிடுகின்றது.

இப்படியான பரந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வளர்ந்தோர் கல்வித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு மாறிவரும் சமுதாயத்தின் தேவைகள் சரியான முறையில் ஆராயப்பட்டு திட்டமும், நடைமுறையும் சமமாக அமைய வேண்டும். வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் பொருளடக்கம், ஓர் சிலந்தியின் வலை எங்ஙனம் சீரான முறையில் அமையப்பட்டதோ அதுபோல் எல்லாவற்றையும் தழுவி செயற்பாடுகளை மேற்கொண்டு சகல விருப்பங்களுக்கும் உதவக்கூடிய முறையிலும் பயனளிக்கக் கூடிய வகையிலும் அமைய வேண்டும். கல்வி வளர்ச்சியை ஓர் ஏணியின் படிகளுக்கு ஒப்பிடலாம். அடிப்படையாக எழுத்தும் எண்ணும் ஒரு குவியமாகவுள்ளன. மொழி, கணிதம், உயிர்நுட்பங்கள், சமூகக் கல்வி அடுத்த படியாகவுள்ளன. வெவ்வேறு துறைகளில் தொழிற்பயிற்சி, கைத்திறன், வேலைத்திறன், தொழில்நுட்பம் அடுத்தபடியாக அமைகின்றன. குடிமைக்கல்வியிலும், சமூகக்கல்வியிலும், குடும்பநலக்கல்வி, சனத்தொகைக் கல்வி, சுற்றுடற்கல்வி, சுகாதாரக்கல்வி, சமூக அபிவிருத்தி, தலைமைத்துவப் பயிற்சி, கலாசாரக்கல்வி, சமயக்கல்வி, அழகியற்கல்வி, தனிப்பட்ட ஒருவனுடைய விருப்பத்திற்கேற்றகல்வி ஆகியவற்றை அடுத்தபடியாகக் கொண்டுள்ளது.

## வரலாறு

ஐம்பது ஆண்டு காலமாக பாடசாலைக்கு வெளியேயுள்ள வயது வந்தோருக்கும் இளைஞர்களுக்கும் கல்வி பயிற்றுவதே இலங்கைக்கல்வி முறையில் முக்கிய அம்சமாக விளங்கியுள்ளது. 1933 ஆம் ஆண்டளவில் முதலாம் சட்டசபையில் கல்வி நிர்வாகக்குழு டொனமூர் யாப்பின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டது. கிராமியப் பாடசாலை அதிபர்கள் பாடசாலைச் சுற்றுடலில் வாழும் கிராமவாசிகளுக்கு உள்ளூர் உத்தியோகத்தர் விஸ்தரிப்பு சேவையில் ஈடுபடுவோர் உதவியுடன் சுகாதாரம், கிராமிய விஞ்ஞானம், விவசாயம், ஆகிய பாடங்கள் கற்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தக்கல்வித் திட்டத்தில் எழுத்தறிவு, இசை, நாடகம், தேசிய விளையாட்டுகள் போன்றவையும் சேர்க்கப்பட்டன. தலைமையாசிரியர்களுக்கு வேதனம் வழங்கி உபகரணங்களை அரசாங்கம் கொடுத்தது. 1933 ஆம் ஆண்டில் பத்து நிலையங்களில் ஆரம்பித்து 1939 ஆம் 'ஆண்டில் இது 500 நிலையங்களாக விரிவடைந்தது. பிரதான நகர்ப்புறங்களில் இதற்குச் சமாந்திரமாக இராப்பாடசாலைகள் நடாத்தப்பட்டன. இராப்பாடசாலைகளில் தொழில்புரிவோரும், வீட்டு வேலையாட்களும் ஆங்கிலத்தையும் வேறு பாடங்களையும் கற்றனர். இவ்வகுப்புகளுக்கு மாணவர் வருகை மிகக்குறைவாக இருந்தது.

1977 ஆம் ஆண்டளவில் பழைய வயது வந்தோர் கல்வி நிலையங்களில் 20 மட்டும் மிஞ்சியிருந்தன. ஆனல் திட்டம் உயிருடன் இருந்தது. அந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன் நோக்கம் 1933 ஆம் ஆண்டில் தொடங்கிய பழைய திட்டத்தைப் புதுப்பித்துச் சீரமைப்பதாகும்.

ஆரம்பத்தில் தலைமை ஆசிரியர்களை தேர்தல் தொகுதிக்கொருவராக, தங்கள் வேலையோடு வளர்ந்தோர் கல்விப் பொறுப்பாளராக நியமிக்கவிருந்தது. ஆனல் அத்திட்டம் இதே வகையில் நிறைவேற்றப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு ஆடிமாதம் ஒரு மீளாய்வு செய்யப்பட்ட திட்டம், அறிமுகப்படுத்தப்பட்டது. வளர்ந்தோர்கல்வி அதிகாரியாக கல்விச் சேவையிலிருந்தும் ஆசிரியர் சேவையிலிருந்தும் தெரிவுசெய்து அவர்களை இப்பணிக்கு விடுவித்து தேர்தல் தொகுதிக்கொருவராக நியமிக்கப்பட்டனர். அடிப்படையில் பழைய திட்டத்தின் படியே வளர்ந்தவர்களுக்கு நவீன வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைச் சமாளிக்கக் கூடிய தன்மையைப் புகட்டுவதாகும். குறிப்பாக ஒருவருடைய தனிப்பட்ட சமூக பண்பாட்டு விருத்திக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். கிராமத்தவர்களுக்கும் நகரத்தவர்களுக்குமான தேவைகளையும் அபிலாசைகளையும் பொறுத்து முடியுமான உதவி அளிப்பதே அடிப்படை நோக்கமாகும். முன்னைய திட்டப்படியே இதற்கும் வேண்டிய உதவியாளராக அரசாங்க உத்தியோகத்தர், வெளி உத்தியோகத்தர், மற்றும் அறிவாளிகள் தெரியப்படல் வேண்டும். முதலில் நிரந்தர வளர்ந்தோர் கல்வி நிலையங்களை நிறுவி இத்திட்டங்களை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டது. ஆனல் அங்ஙனம் நடைபெறக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. இருந்தபோதிலும் வயது வந்தவர்களுக்கு அவர்களுடைய தேவைகளுக்கேற்ப கிராமம் கிராமமாகச்சென்று நடமாடும் கல்வித் திட்டம் ஒன்று நடத்த எடுத்த தீர்மானம் திறமையான உத்தியோகத்தர்களால் நடைமுறைப்படுத்தியபோது, அவை உடனடியாக வெற்றியை அளித்தன. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, முன்னேடியாக பாடசாலையை விட்டவர்களுக்கு பகுதி நேர தொழில் நுட்ப அறிவு கற்பிக்கும் திட்டம் பழைய தொழிற்கல்வித் திட்டத்திற்குப் பதிலாக ஒழுங்கு செய்யப்பட்டது. இது இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டு இலங்கையில் ஒவ்வொரு தொகுதியிலும் பல பாடசாலைகளில் செயற்படுத்தப்படுகின்றது. பாடசாலைக்கு வெளியே வளர்ந்தோர் கல்வித்திட்டம் உத்தியோகபூர்வமாக அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ந்தோர் கல்வி தேசிய கல்வித்திட்டத்தின் ஒரு அங்கமாக்கப்பட்டுள்ளது. ஒரு தேர்தல் தொகுதி பெரும்பாலும் ஒரு உதவியரசாங்க அதிபருடைய நிர்வாகப் பிரிவாக இருக்கும். அரசாங்க அதிபரால் இணைக்கப்படுகின்ற சேவைகளைவிட ஏனைய அமைச்சுகளாலும், திணைக்களங்களினுலும், நேரடியாகக் கட்டுப்படுத்துகின்ற சேவைகளும் இருக்கின்றன. இதேபோன்று தன்னிச்சா சங்கங்களும் பல துறைகளிலும் சேவை புரிகின்றன. வளர்ந்தோர் கல்விச் சேவை சிறப்பாக செயலாற்றப்படும் சகல தேர்தல் தொகுதிகளிலும் அங்குள்ள வளர்ந்தோர் கல்வியதிகாரிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றுர்கள். இவர்கள் அங்குள்ள எல்லாச் சேவைகளையும் வழங்கியும், ஒன்றிணைத்தும் மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் மிக நுட்பமாகச் செய்து முடிக்கின்றுர்கள். இவர்கள் ஒரு முக்கியமான கல்வி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றுர்கள்.

## அவ்வாறுன திட்டங்களில் மிக முக்கியமானவை

தற்பொழுது திட்ட அமுலாக்கல் அமைச்சு 11 மாவட்டங்களில் வளர்ந்தோர் கல்வி அதிகாரிகள் மூலம்போசாக்குக் கல்வி புகட்டுகின்றது. இதற்கு வளர்ந்தோர் கல்வி அதிகாரிகள் இணைப்பு அதிகாரிகளாகவும் ஊக்குவிப்பாளர்களாகவும் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து போதிக்கும் ஆசிரியர்களாகவும் கடமை ஆற்றுகின்றனர். வியாபாரகப்பல்துறைஅமைச்சு வளர்ந்தோர் கல்விச் சேவையைப் பயன்படுத்தி, இலங்கை முழுவதிலும் நுகர்வோர் சங்கங்களை அமைத்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு, வளர்ந்தோர் கல்வியில் ஒரு முக்கிய அம்சமாகும். வளர்ந்தோர் கல்வி அதிகாரியினுடைய வேலைகளில் ஒரு முக்கிய பகுதி, தொழிற் பயிற்சி வழிகாட்டலாகும். இந்த வேலைக்கு அவர் தொழிற் திணைக்களம், தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய தொழிற் பயிற்சிச் சபை போன்றவற்றேடும் ஏனைய தன்னிச்சா சங்கங்களுடனும் இணைந்து செயலாற்றுகின்றனர். முழுநேர பகுதிநேர தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கு ஒழுங்கு செய்து, மேற்பார்வை செய்து இந்நெறிகளை எல்லோரும் விரும்பிப் பயிலச் செய்வது இவர்களுடைய உத்தியோகபூர்வமான கடமையாகும். இலங்கை முழுவதிலும் பாடசாலைகளுக்குப் போகக்கூடிய வயதுள்ள பிள்ளைகள் எழுத்தறி

(11ஆம் பக்கம் பார்க்க)

## சோழப் பெரும்பேரரசில்

# கிளர்ச்சிகளும் அடக்குமுறைகளும்

### அறிமுகம்

நவீன வரலாற்றில் அரசாங்கங்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் பற்றியும் அவற்றின்மீதான அடக்கு முறைகள் பற்றியும் நிறைய வாசித்தும், கேட்டுமிருக்கிறோம். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் தத்தமது அரசியல் அதிகாரங்களைப் பாதுகாப்பதற்காக எவ்வகைப்பட்ட கிளர்ச்சிகளையும் 'அடக்கு முறைகள்' மூலம் அழித்து தமது ஆதிக்கத்தினை உறுதி செய்துகொண்டமைக்கு இலங்கை, சீனு போன்ற நாடுகளில் ஏற்பட்ட அண்மைக்கால நிகழ்வுகள் சான்றுதாரங்கள் ஆகின்றன. இத்தகைய நிகழ்வுகள் நவீன அரசியலில் மட்டுமன்றி, புராதன வரலாற்றுக் காலங்களிலும் ஏற்பட்டிருந்தன. இச் சிறு கட்டுரையில் மத்திய காலத் தென்னிந்திய வரலாற்றில் பெரும் "திராவிடப் பேரரசு" எனப் பெயர் பெற்ற சோழப் பேரரசர் காலத்தில் ஏற்பட்டிருந்த அரசுக்கெதிரான கிளர்ச்சிகள் பற்றியும் அவற்றின் மீதான அடக்கு முறைகள் பற்றியும் சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்படுகின்றது. பொதுவாக சோழப் பேரரசர் காலமானது சைவத்தினையும் தமிழ்மொழியையும் வளர்த்தெடுத்த "புகழ்பூத்த ஒரு பொற்காலம்" எனவும், இந்துக் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றில் ஒரு சிறப்புமிக்க—ஒளிபொருந்திய காலம்—எனவும் போற்றப்படுகின்றது. கம்பன் தோன்றி காவியம் அரங்கேற்றிய இக்காலப் பகுதியிலேயே சாதாரண விவசாயக் குடியானவர்களால், அவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த கொடுமையான வரிமுறைகளுக்கு எதிரான அரச எதிர்ப்பியக்கங்கள் நடாத்தப்பட்டன. அவ்வாறான எதிர்ப்பியக்கங்கள் யாவும் பேரரசனின் அனுமதியுடன் ஆட்சியாளர்களால் எந்தவிதமான கருணையுமின்றி அடக்கி, ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இத்தகைய செய்திகள் பலவற்றைத் தாங்கிய சாசன ஆதாரங்கள் தற்போது வரலாற்றுய்வாளர்களுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து, இப்புனிதமான பேரரசுக்குள் காணப்பட்டிருந்த சமூக ஒடுக்கு முறைகள் பற்றிய செய்திகள் வெளிக்கொணரப்படுகின்றன.

### சோழப் பேரரசர்களது நிலக் கொள்கையும் வரி வசூலிப்பும்

முதலாம் பராந்தகச் சோழனைத் தொடர்ந்து சோழப் பேரரசானது கடற்படை, தரைப்படை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு பேராதிக்கவாத நோக்கில் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இந்நிலையானது முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலங்களில் மிக உச்சமான நிலையைப் பெற்றுக் கொண்டது. அப்பொழுது சோழப் பேரரசானது தீபகற்ப இந்தியாவுக்கு வெளியே பெருங்கடற் பேரரசாக, லக்ஷதீவுக்கூட்டங்கள், இலங்கை, தென்கிழக்காசிய நாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது. இந்நிலையிலேயே ஏறத்தாழ 77 வருடகாலங்களாக (கி.பி.993–கி.பி. 1070 வரை) அவர்களது மேலாதிக்கம் இந்துசமுத்திரப பிராந்தியத்தில் ஓங்கிக் காணப்பட்டிருந்தது. இக்காலகட்டததில் பல தடவைகளில் அரசுக்குரிய நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு வளர்ந்து வந்த அரச நிர்வாக முறைக்கேற்ப வருமான அலகுகள் கணிப்பீடு செய்யப்பட்டன. இவ்வாறு கணிப்பீடு செய்யப்படும்போது தனியார் நிலவுடைமையான கோவில்களுக்குரிய தேவஸ்தானம், பள்ளிச்சந்தம் என்பனவும், பிராமணர்க்குரிய சதுர்வேதி மங்கலம், மற்றும் புன்செய் நிலங்களும் வரிவிலக்குப் பெற்றவையாகக் கொள்ளப்பட்டன. மிகுதியான நன்செய் நிலங்களுக்குரிய வருமானமே வரியாகவும், குத்தகையாகவும் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. நிலங்களுக்குரிய வரிவிலக்குகள் அதிகரிக்க அதிகரிக்க மக்களிடமிருந்து அறவிடப்படும் வரி — குத்தகை முறையின் அளவும் அதிகரிக்கத் தொடங்கியது. அவைகூட நாட்டின் பரிபாலன முறையை நடாத்துவதற்குப் போதாத விடத்து, மேலதிகமான பல விசேட வரிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன. அவற்றிலிருந்து மக்கள் மீள முடியாதவாறு, வரிசேகரிப்பு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த பிரதிநிதியின் மேற்பார்வையில் உள்ளூராட்சி அலுவலர்கள் (வரிசேகரிப்பாளர்) மக்களிடமிருந்து அவற்றினை அறவிட்டும் அவ்வாறு அறவிடமுடியாத பட்சத்தில் அவர்களைக் கொடுமைப்படுத்தி— தண்டனைக்குள்ளாக்கி — மாற்றுவழிகளைக் கையாண்டு தத்தமது பணிகளை முடித்துக் கொண்டனர்.

### வரிப்பழுவுக்கு எதிராக எழுந்த எதிர்ப்பியக்கங்கள்

மக்களிடமிருந்து வரிகளை அறவிடாது எந்தவிதமான அரசாங்கங்களும் இயங்க முடியாது. ஸ்திரமான வரிமுறைகளிலேயே சீரான நிர்வாக முறையை அரசு மேற்கொள்ள முடியும். அவ்வகையில் சோழப் பெரும் பேரரசும் நிர்வாக முறைகளை மத்திய — மாகாண மட்டத்தில் பின்பற்றியிருந்தது. ஆனுல் அப்பேரரசின் மிகையான விரிவு காரணமாக நிர்வாகச் சிக்கல்களும் செலவீனங்களும் அதிகரித்தமையைத் தொடர்ந்து மக்களிடமிருந்து சீரற்ற மேலதிக வரிகளை அறவிட வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டது. ஆனுல் நிலமும் அதனைச் சார்ந்த உற்பத்திகளும் அதிகரிக்காத நிலையில் மக்கள் தங்களிடமிருந்து கோரப்படுகின்ற பெரியளவிலான வரிகளைச் செலுத்த முடியாதிருக்கும் சந்தர்ப்பங்களில், அரசுக்கெதிரான அதிருப்தியையும் எதிர்ப்புணர்வுகளையும் வெளிப்படுத்தினர். பிற்காலச் சோழர் காலத்தில் பொறிக்கப்பட்ட சாசனங்களில் அடங்கியுள்ள தகவல்கள் பல சோழபபேரரசில் ஏற்பட்ட அரசுக்கெதிரான கிளர்ச்சிகளைப் பற்றியும் அவற்றின் மீதான அடக்கு முறைகளைப் பற்றியும் எடுத்துக் காட்டுகின்றன.

பிற்காலச் சோழ மன்னர்கள் பெருங்கோவில்களையமைத்து அவற்றின் மையத்தளத்திலிருந்து கொண்டு நிலங்களைக் கட்டியாள்வதிலும், அதற்காக பகைமையரசுகளுடன் போர்களை நடாத்துவதிலும் துரிதமாக ஈடுபட்டிருந்தனர். பேரரசின் விஸ்தீரணம் அதிகரிக்க அதிகரிக்க போர்களை நடாத்துவதற்கான செலவுகளும், நிர்வாகச் செலவீனங்களும் அதிகரித்துக்கொண்டு சென்றன. இத்தேவைகளை ஈடு செய்யும் முகமாக பேரரசர்கள் புதிய புதிய வரிகளை மக்களிடமிருந்து வசூலிக்கத் தொடங்கினர்.

**செ. கிருஷ்ணராசா**

பாண்டிய அரசுடன் 1–ஆம் பராந்தகச்சோழன் கி.பி. 945 இல் போர் தொடுத்தபோது மக்கள்மீது 3000 கழஞ்சு பொன்னை வரியாக விதித்தான். வேங்கி நாட்டுடன் போரில் ஈடுபட்ட வீரராசேந்திரன் கி.பி. 1065 இல் ஒவ்வொரு வேலி நிலத்திற்கும் ஒவ்வொரு கழஞ்சு பொன் மேலதிக வரியாக அறவிட்டிருந்தான். எண்ணற்ற கோவில்களின் அமைவுக்கும் அபிவிருத்திக்குமாக பல சுமத்தப்பட்ட வரிகள் மக்களிமிருந்து வசூலிக்கப்பட்டன. கி.பி 922 இல ஈரோடு என்ற இடத்திலிருந்த கோயிலுக்காக ஒரு வரி விதிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு குடும்பமும் சிறுசிறு தொகையாகக் கொடுத்த வரியுடன் மேலதிகமாக ஒவ்வொரு திருமண வைபவத்துக்கும், கிரியைகளுக்குமாக ½ ப்பணம் வரியாகச் செலுத்தவேண்டியிருந்தது. கி.பி, 985 இல் அரச பதவியைப் பெற்ற 1–ஆம் இராசராசன் தலைச்செங்காட்டுக் கோயிலுக்காக 100 காசு மேலதிக வரியாக விதித்து, அதனை மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டான். இவற்றையும் விட பேரரசர்களது பிறந்த நாட் கொண்டாட்டங்களுக்காகவும் விசேட வரிமுறை மக்கள் மீது திணிக்கப்பட்டமையையும் காணலாம்.

இவ்வாருக அரசு விதிக்கும் வரிச்சுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் பொதுமக்களது வாழ்வின் உயிரோட்டமாக அமைந்தது பயிர்ச்செய்கையேயாகும். இவ்வாறு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏழைக் குடிமக்கள் பெருமளவுக்கு நிலமற்றவர்களாகவும், குத்தகையடிப்படையில் நிலத்தினைப்பெற்று தமது வாழ்க்கையினை நடாத்தி வந்தவர்களாகவும் காணப்பட்டனர் இத்தகைய நிலங்கள் கோயில்களுக்கும், தனிப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கும் தானமாகவும் நன்கொடையாகவும் வழங்கப்பட்டபோது அந்நிலததில் உழைத்துவந்த ஏழைவிவசாயிகள் எந்தவித ஆதாரமுமின்றி கைவிடப்பட்டனர். கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்டபோது நிலம் 'பிரம்மதேயம்' எனவும், நிலவுடைமையாளரானவேளாளருக்கு வழங்கப்பட்டபோது 'வேளாண் வகை' எனவும், அதிகாரிகள், சேனுதிபதிகள், நடனமாதர் போன்ருேருக்கு வழங்கப்பட்டபோது 'ஜீவிதம்' எனவும் வழங்கப்பட்டன. இவற்றுள் இறை செலுத்தாத நிலங்களாக தேவதானம், பள்ளிச்சந்தம், பிரம்மதேயம் என்பன் கணிக்கப்பட்டன.

சில சமயங்களில் ஜீவிதமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிலங்களும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. இவ்வாறு காலத்துக்குக் காலம் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலங்கள் அதிகரித்து வந்தபோது சிறுவிவசாயிகளும் ஏழைக் குடியானவர்களுமே அதிகரித்து வந்து கொண்டிருந்த வரிப்பழுவினை மேலும் மேலும் கூடுதலாகத் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

### வரிகொடா மறுப்பு

இவ்வாறுன வரிப்பழுவினை தாங்கிக் கொள்ள முடியாத மக்கள் அதனைப் பேரரசனுக்கு தெரிவித்திருந்தும் நிவாரணம் பெறமுடியாதவொரு நிலையில், கிராமிய மட்டத்தில் அரசுக்கெதிரான வரிகொடா எதிர்ப்பியக்கங்களில் ஈடுபட்டனர். சில கிராமங்களில் குத்தகைக்காரர்கள் வரிசெலுத்த மறுத்ததோடு மட்டுமல்லாது, அவ்வரிகளை அநீதியானவை எனவும் சட்டத்துக்கு மாறுனவை எனவும் பிரச்சாரம் செய்து வரிசெலுத்த மறுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் ஊர்ச்சபைகள் வரிசெலுத்த மறுத்தோர்களுக்கெதிராக நடவடிக்கைகள் எடுத்தன. கி.பி. 1009 இல் ஊர்ச்சபையின் நடவடிக்கைகளைத் தாங்கமுடியாத குத்தகைக் காரர்கள் 1ம் இராசராசனிடம் மேன்முறையீடு செய்தனர். ஆனுல் பேரரசனே அவர்களுக்கு உறுதியளிப்பதற்குப் பதிலாக 1001 க்கும் 1008 க்குமிடைப்பட்ட காலத்தில் வரி செலுத்த தவறியோர் அனைவரினதும் நிலங்கள் அனைத்தையும் அபகரிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டான்.

1ம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் (1070 – 1120) மூன்றுவது ஆட்சியாண்டில் ஓர் ஊரைச் சேர்ந்த மக்கள் ஒன்றுகூடி புதிதாக விதிக்கப்பட்ட பசுக்கள், எருமைகள் மீதான வரிகளைச் செலுத்துவதில்லை எனத் தீர்மானம் மேற்கொண்டனர். தஞ்சாவூர் மாவட்டத்துக் கொடுங்கைச் சாசனம், வலங்கைச் சாதிப் பிரிவுகள் 98 பிரிவினர் கூட்டம் கூட்டி தவறுன எதேச்சாதிகாரமான வரிகளை எதிர்ப்பது என எடுத்துக் கொண்ட தீர்மானத்தினைக் குறிப்பிடுகின்றது. கி.பி 1109 இல் இடங்கைப் பிரிவைச் சேர்ந்த 98 சாதியினர் திருச்சி மாவட்டததில் ஊற்றகதூர் என்ற கிராமத்திலே கூடி "தாமனை வரும் ஒரு தாய் — தந்தையர் பிள்ளைகள் போல் நடந்து கொள்ள வேண்டும் எனவும் தமது நலன்களுக்கு எதிராக பிறர் எவராவது நடந்து கொண்டால் தாம் எல்லோரும் இணைந்து எதிர்க்க வேண்டும் எனவும் தீர்மானித்தனர். இத்தீர்மானத்தின்படி நடந்து கொள்ளத் தவறுவோர் இடங்கைப் பிரிவிலிருந்து வெளியேற்றப்பட்டு, இடங்கை வேலைக்காரரின் பகைவர்களாக கருதப்பட வேண்டும்" எனவும் அறிவித்தனர்.

கி.பி. 1128இல் இடங்கைச் சாதியினரின் 98 உபபிரிவுகளும் மீண்டும் திருச்சி மாவட்டத்திலுள்ள ஓரிடத்தில் கூடி மேற்கூறிய தீர்மானத்தினை, அது நல்லதோ அல்லது கெட்டதாகவோ இருந்தாலென்ன தாம் எல்லோரும் ஒருமித்து அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று உறுதிப்படுத்திக் கொண்டனர். கி பி 11 ஆம் நூற்றுண்டில் வலஞ்சியர் என்ற வணிக கணத்தினர் மைலார்ப்பு என்ற இடத்தில் கூடி தம்மீது விதிக்கப்படும் வரியானது முற்றுக நீக்கப்பட வேண்டும் என்றும், தமக்குக் கிடைக்கும் வேதனத்தை இரட்டிப்பாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். மேலும் தங்களது நகரத்தில் "வாளேந்தி வரி சேகரிக்க வருவோர்" வரி சேகரிப்பின் போது மக்களைச் சிறைப்படுத்தவோ அல்லது வரி செலுத்தாதோரை பட்டினி கிடக்க வைக்கவோ அல்லது வேறு வகைகளில் தண்டிக்கவோ அனுமதிக்கக் கூடாது எனவும் தீர்மானம் இயற்றினர். இத்தடைகளை மீறி இயங்கும் வரிசேகரிப்பாளர்களைக் கொன்று விடுவது எனவும் தீர்மானம் மேற்கொண்டனர்.

வலங்கை— இடங்கை என்ற சாதிப்பிரிவுகள் பற்றிச் சோழர் காலச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன இவை ஒவ்வொன்றிலும் 98 உபபிரிவுகள் காணப்பட்டன. இவ்விரு பிரிவுகளுக்கிடையேயும் பாரம்பரிய பகைமையுணர்வு இருந்த பொழுதிலும் பிரச்சினை ஏற்பட்ட காலங்களில் இவ்விரு சாராரும் ஒன்று சேர்ந்து இயங்கினர் எனத் திட்டவட்டமாகக் குறிப்பிடலாம். பிற்பட்ட சோழர்காலத்தில் இவ்விரு பிரிவுகளும் ஒன்றுகூடி நடத்திய பெருங் கூட்டத்தில் மன்னனுக்குச் செலுத்தப்பட வேண்டிய 'ராஜாகரம்' என்ற வரியை நிலங்களின் வளத்திற்கும் உற்பத்திக்கும் ஏற்றவாறு தாமே நிச்சயித்து கோயில்களுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

கலைச்சாரல்

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசியஇனப் பிரச்சினையும்

அ. யேசுராசா

சென்றவாரத் தொடர்ச்சி

5 இலங்கையில் நிகழ்ந்த இனக் கலவரங்கள் – சரியாகச் சொன்னால் தமிழர்மீது நிகழ்த்தப்பட்ட இன வன்முறைகளே, தமிழர் பிரச்சினைகளை உலகெங்கும் தெரியப்படுத்தின. இது பற்றிப் பல கதைகள் எழுதப்பட்டுள்ளபோதும், மிகச் சில கதைகள்தான் 'நல்ல கதை'களாகத் தேறுகின்றன. பெரும்பாலான கதைகள் 'வெறும் உணர்ச்சிக் கதைகளாகவே' நின்றுவிடுகின்றன. மு. தளைய சிங்கம் எழுதிய இரத்தம், வரதர் எழுதிய 'கற்பு', பிரான்சிஸ் சேவியர் எழுதிய 'எதிரொலிகள்', ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'பேய்களுக்கு யார் பயம்?' ஆகியவை நல்ல கதைகள்.

அ) இரத்தம் 1958 இனக் கலவரத்தில் எட்டுப்பேரால் கற்பழிக்கப்பட்டு விசரிபோலாகிவிட்ட 'கமலத்'தைக் கண்ட ஓர் இளைஞனின் உணர்வுகளைச் சித்திரிக்கிறது. கணவன் பொன்னம்பலம் அடித்துக் கொல்லப்பட்டு, கயிற்றால் கட்டப்பட்டுத் தெருவில் இழுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்படுகிறான். எமக்குக் காலாதிகாலமாய் ஊட்டப்படும் மரியாதை மரபு, அடங்கிச் செல்லும் பண்பு, போன்றவற்றின் கையாலாகாத்தனம் உணர்த்தப்படுகின்றது. பஸ்ஸில் ஏறுகையில் மண்டை அடிபட்டு இரத்தம் வழியும்போது 'கொண்டக்டர்' – வழிநடத்துநர் பதட்டப்படுகிறார். இளைஞன் இரத்தத்தைப் பச்சையாகப் பார்க்கிறான் பதட்டப்படாமல். வழிநடத்துநரின் சநாதனப் பார்வைக்கு மாறாக, வன்முறையை நோக்கும் புதிய பார்வை குறியீடாக வெளிப்படுத்தப்படுகிறது இறுக்கமான கட்டமைப்பு; மசறிவான மொழி நடை; அழகான கதை.

ஆ) கற்பு கதையும் 1958 கலவரம் பற்றியதே. கணபதி ஐயரின் மனைவியை மூவர் கற்பழிக்கின்றனர் வன்முறையின் முன் பலமிழந்த மனிதர்கள். தன் மனைவி பனத்தினால் கற்பழிக்கவில்லையென கணபதி ஐயர் நம்புகிறார்; தன் நண்பருக்கும் வெளியிடுகிறார். இன்றுவரை தொடரும், எமது பெண்களின் மீதான 'பாலியல் வன்முறை' என்ற முக்கிய பிரச்சினையில் ஒரு வெளிச்சத்தினை இக் கதை, 'காலத்தைக் கடந்தும்' பாய்ச்சி நிற்கிறது. மனதில் பதியும் இந்த நல்ல கதையை 'வரதர்' எழுதியுள்ளார்.

இ) எதிரொலிகள் என்ற கதையை 'பிரான்சிஸ் சேவியர்' எழுதியுள்ளார். 1977 கலவரத்தில் கொழும்பிலிருந்து திருமலை பஸ்ஸில் வருகையில் 'ஹபரணை'யில் தமிழருக்கு நிகழ்ந்த கொடுமைகள், அதில் தப்பிய தமிழ் இளைஞனை உறுத்துகின்றன. உதவிகோரிய பெண்ணுக்கு உதவவில்லை: வாளால் வெட்டப்படும்போது அபயமெழுப்பியவனையும் காணாதவனேபோல் நின்றான். திருமலைக்கு வந்தபின் 'குற்ற உணர்வில்' தவிக்கிறான். திருமலையில் கலவரம் வெடிக்கையில், தன்னுடன் வேலை செய்யும் சிங்களப்பெண் சோமாவை அவள் இருக்கும் வீட்டில் கொண்டுபோய் விடுகிறான். தாயை எண்ணிப் பயந்தபடியே தனது ஊரிற்குச் செல்லுகையில், பாதையில் எதிரே இரு தமிழர்கள் வாளால் தாக்கப்படுகின்றனர். ஓடிச்சென்று தடுத்துத் தாக்குகிறான்; காயப்பட்டு மயங்குகிறான். குற்ற உணர்வும், விழிப்பும், மனித நேசங்கொண்ட செயற்பாடும் 'எதிரொலிகளாக' நன்றாக வெளிப்படுத்தப்படுகின்றன.

ஈ) பேய்களுக்கு யார் பயம்? —ராஜேஸ்வரிபாலசுப்பிரமணியம் எழுதியது (1980). லண்டனில் தனது அறையில் மகாதேவன் பயங்கர நினைவுகளுக்கு உள்ளாகிறான். 1977 இல் அனுராதபுரத்தில் கற்பழிக்கப்பட்டுப், பின்னர் தற்கொலை செய்த தமக்கையின் நினைவு உறுத்துகிறது. பிரமைகளிற்கு உள்ளாகிறான். பேய்கள் உலாவுவதுபோல் கனவு கண்டும் கத்துகிறான். வீட்டுக்காரக் கிழவன், முன்பு அந்த அறையிலிருந்த இலங்கைப் பெண் தற்கொலை செய்ததைக் கூறிவிட்டு "பேய்க்குப் பயமா?" என்று கேட்கிறான். அவன் வெறுமனே நினைக்கிறான். ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்: மகாதேவன் வெறித்துப் பார்க்கிறான். 'பேய்களை உண்டாக்கி உலகத்தை உறிஞ்சும் மனிதப் பேய்க்கூட்டத்தைக் கண்டுதான் பயப்படுகிறேன்.

ஒரு காலத்தில், அந்தமாதிரிப் பேய்க்கூட்டத்தை அழிக்க வல்லமையும் உண்மையுமுள்ள பூசாரிகள் உண்டாவாரென நம்புகிறேன் என்று சொன்னால், கிழவனுக்கு விளங்குமா?'

கதை முடிந்து விடுகிறது. 'பூசாரிகள்' உண்டாகவேண்டுமென்ற உணர்வு எம்முள்ளும் பாய்வதில், கதை வெற்றியடைகிறது.

உ) செ. யோகநாதனின் 'இன்னொரு மண்டலம்', செ. கணேசலிங்கனின் 'சங்கமம்', நவத்தின் நந்தாவதி', உதயணனின் 'தேடிவந்த கண்கள்', ஆகிய கதைகளில், சிங்களப் பாத்திரங்கள் இறக்கின்றன—தமிழர்களைக் காப்பதற்காக அல்லது அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதற்காக. இவற்றின் கட்டமைப்பில் செயற்கைத் தனங்கள் உள்ளன. சாந்தனின் 'மனிதர்களும் மனிதர்களும்' கதையிலும் ஒருவகைச் செயற்கைத்தனமும், பிழையான நோக்குநிலையும் காணப்படுகின்றன. 1977 இனக் கலவரப் பின்னணியில், இது நிகழ்கிறது.

## 6. தரப்படுத்தல்

எழுபதுகளில் தமிழ் மாணவர்களைப் பாதிப்புள்ளாக்கிய இத் திட்டம் செ. யோகநாதனின் 'பொய்மையின் நிழலில்' என்ற கதையில் கையாளப்படுகிறது. தமிழர்களின் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற கூற்றின் அழுத்தத்தைக் குறைக்கும் முறையில், வேறொரு விளக்கத்தையே ஆசிரியர் முன்வைக்கிறார். மொழி பல இடங்களில் செயற்கையானதாக இருக்கிறது. ஒரு 'தயாரிப்புக் கதை' என்ற உணர்வே படித்து முடிக்கையில் எழுகிறது.

7. எழுபதுகளில், நிலச்சுவீகரிப்பு என்ற பெயரில், மலையக மக்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தது. 'தேசிபமயமாய்ப் போலிச் சமதர்மக் காற்று வீசிய'போது ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றை, கே. கருப்பையா எழுதிய எங்கள் இரத்தங்கள் வித்தியாசமானவை என்ற கதை சித்திரிக்கின்றது. சிவனு இலட்சுமணன் கொல்லப்பட்டதற்கும், டெல்டா தோட்டத்து லயன்கள் எரிக்கப்பட்டதற்கும், பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவித்து, பாடசாலை மாணவர்கள் ஹட்டனில் ஊர்வலம் நடத்துகின்றனர்; பொலிசாரும், காடையரும் தாக்கியதில் பலர் காயப்படுகின்றனர். பாதிப்புற்ற பாலா என்ற மாணவன் 'எங்களிடமும் ஆயுதம் இருந்தால்......' என்று சிந்திக்கத் தொடங்குகிறான். ஆசிரியரின் உணர்வு ஓரளவு செம்மையாக எம்முடன் பகிரப்படுகிறது. 1977 இல் இக்கதை வெளிவந்துள்ளமை முக்கியமானது.

8. வரதர் எழுதிய இனி ஒரு புதுயுகம் பிறக்கும் என்ற கதை, யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, மக்கள்மீது பொலிசார் நிகழ்த்திய தாக்குதலைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. நிகழ்ச்சி விபரணங்கள் செய்திப் பத்திரிகை அறிக்கை போலிருக்கின்றது; கலையாக்கமாக மாறவில்லை.

9. பிரான்சிஸ் சேவியர் 1980 இல் எழுதிய விடியாத இரவுகள் என்ற கதை, வடக்கில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட ஆரம்ப நாட்களில் சந்திரன் என்ற அரசியல் உணர்வுள்ள இளைஞன், இரவில் வீட்டிலிருந்து பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டு, விடியற்காலை முச்சந்தியில் செத்துக்கிடப்பதைத் தாக்கமாகச் சித்திரிக்கிறது. அவனது விரிந்த கண்ணோட்டமும், உணர்வும் கூடவே வெளிப்படுத்தப் படுகிறது. மனதில் பதியும் நல்ல கதை.

10. 1983 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய இனப் பிரச்சினையும், தமிழ்ப் பிரதேச நிலைமைகளும் தீவிரமடையத் தொடங்கின. அரசின் ஒடுக்குமுறை இயந்திரங்கள் முடுக்கிவிடப்பட்டன. தனிநாடு பற்றிய மக்களின் நாட்டமும், போராளிகளின் இயக்க ரீதியிலான செயற்பாடுகளும் அதிகரித்தன. அரசுப் பயங்கரவாதத்தினால் விளைந்த கொடுமைகள், போராளிகளின் செயற்பாடுகள், தியாகங்கள், புதிய சூழலில் தோன்றும் பிரச்சினைகள், உருவாகும் புதிய மனித ஆளுமைகள், பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான முரண்பாடுகள் போன்றனவெல்லாம் சிறுகதைகளில் இடம் பெறத் தொடங்கின. குறிப்பாக 1985 இன் நடுப்பகுதியில் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டதன் பின் புதிய நாளேடுகள், சஞ்சிகைகள் பல வடபகுதியில் தோற்றம் பெற்றன. இவற்றில் இத்தகைய படைப்புகள் பெருமளவில் வரத் தொடங்கின. இத்தகைய சூழலின் தாக்கத்தில் முற்போக்குக் குழுவினரின் போக்கிலும் ஓரளவு மாறுதல் ஏற்பட்டது. "படுநாசமான கருத்தொன்று இன்று தமிழ் மக்கள் மத்தியில் விதைதூவப்படுகின்றது. 'தனிநாடு பெறுவோம்' என்ற இந்தக் கருத்துக்குப் பின்னால் சாதி வெறியர்களும், சுரண்டல் கூட்டமும், பிற்போக்கு இனவாதிகளும், சர்வதேச ஏகாதிபத்தியக் கும்பலும் அணிசேர்ந்து நிற்கின்றன" என 1975 மாசியில் எழுதிய 'முற்போக்கு மல்லிகை'கூட 'போராளிகளைப்' பாராட்டுவதும், அவர்களது நடவடிக்கைகளைச் சித்திரிப்பதுமான கவிதைகளையும், சிறுகதைகளையும் வெளியிடத் தொடங்கியது. அரச வன்முறைகளால் விளைந்த மக்களின் அவலங்களைச் சித்திரிக்கும் படைப்புகளும் வெளியிடப்பட்டன. இச் சஞ்சிகை சார்ந்துள்ள கொம்யூனிஸ்ற் கட்சியின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான 'இரண்டக நிலை', இது வெளியிட்ட படைப்புகளிலும் காணப்படுகிறது. முற்போக்கு எழுத்தாளராகச் சொல்லப்படும் சாந்தனின், 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' என்ற ('முரசொலி' வாரமலரில் வெளிவந்த) குறுநாவலின் கதாநாயகனின்-கொம்யூனிஸ்ற் கட்சி உறுப்பினராக உள்ளவன்– "நான் தனிநாட்டுக்கும் மாறில்லை; ஐக்கிய இலங்கைக்கும் எதிரில்லை" என்ற கூற்றில், இந்த 'இரண்டக நிலை' தெற்றெனை வெளிப்படுகின்றது. எந்தப் படைப்பும் மக்களின் பிரச்சினைகளிற்குத் தீர்வினைக் காட்ட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட 'முற்போக்காளர்கள்' தமது இக்காலப் படைப்புக்களில், எந்தவிதத் தீர்வையும் காட்டாது அவலங்களை வெறுமனே சித்திரித்தார்கள் என்பதையும், இங்கு குறிப்பிடுவது அவசியம். ஒரு விதத்தில், அவர்கள் 'யதார்த்தவாதிகளாக' அல்லாது முன்னர் தாம் பரிகசித்த 'இயற்பண்பு வாதிகளாகவே' இயங்கினர்.

இத்தகைய பின்னணிகளில் பல்வேறு வெளியீடுகளிலும் ஏராளமான சிறு கதைகள் வந்துள்ளபோதும் பெரும்பாலானவை 'வெறும் பத்திரிகைத் தரக்' கதைகளாகவே உள்ளன. உணர்வு நலனும், மொழிச் சிறப்பும், கலைச் செம்மையும் கொண்டமைந்த சிறுகதைகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ரஞ்சகுமார் எழுதிய 'கோசலை', 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' ஆகியனவும், நந்தி எழுதிய 'கேள்விகள் உருவாகின்றன'வும் பலராலும் பாராட்டப்பட்ட சிறந்த கதைகள். அதிலும், ரஞ்சகுமாரின் கதைகள் புதிய தலைமுறைக்குரிய நவீனத் தன்மையும், வெளிப்பாட்டுத் திறனுங் கொண்டவையாய் — தாக்கவலு நிரம்பியனவாய் அமைந்துள்ளன ஜனகமகள் சிவஞானம் எழுதிய 'கோழைகள்', எஸ். கே. விக்னேஸ்வரன் எழுதிய 'வேலிகள்' என்பனவும் நல்ல கதைகள்.

செ. யோகநாதன் பல கதைகளை எழுதியுள்ளபோதும், அனுபவ உந்தலற்ற—செயற்கைத் தனங்கள் நிறைந்த—தயாரிப்புக் கதைகளாகவே, அவைகளிற் பலவும் உள்ளன.

தெணியானின் 'நேர்த்தி', 'வந்தி.' போன்றவையும் 'தயாரிப்புக்' கதைகள். இன்றைய சூழலில் நன்கு 'விலைபோகுமென்று' கருதியதால் அவ்வாறு தயாரித்தார் போலும்! ச. முருகானந்தன் எழுதிய 'தரை மீன்கள்' கதையும் ஒரு தயாரிப்புக் கதையாகவே இருக்கிறது மண்டைதீவில் 31 குருநகர் மீனவர்கள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகைச் செய்தியை மட்டும் வைத்துக், கதை எழுதியிருக்கிறார் போலிருக்கிறது! கடற்கரையில் வள்ளங்கள் கவிழ்க்கப்பட்டிருத்தல், கட்டுமரங்கள் பாவிக்கப்படுதல், வீச்சுவலை வீசித்தொழில் செய்தல் என்று அவர் எழுதும்போது, குருநகரின் தொழில் முறைகளுடன் அவரது பரிச்சயமின்மை வெளிப்படுகிறது. பாத்திரங்களின் பேச்சு மொழியும் இவ்வாறே அந்நியமானதாயிருக்கிறது.

சென்ற ஒக்ரோபரிற்குப் பிந்திய நிகழ்வுகளை ஆழகநம்பியின் 'நாய்களோ' என்ற கதை சித்திரிக்கின்றது சில குறைபாடுகள் இருக்கின்றபோதிலும் அவல உணர்வு நன்கு பரிமாற்றப்படுகின்றது; குறிப்பிட வேண்டிய கதை. சொக்கன் எழுதிய அழைப்பு என்ற கதையும் ஒக்ரோபர் நிகழ்வுச் சூழலைச் சித்திரிக்கிறது. ஆனால், நன்றாக வராத—மிகச் சாதாரணமான கதையாகும் இது.

கையாளும் விடயத்துடனான பரிச்சயம், படைப்பு நேர்மை, கலை வடிவங்கள் கலையாக்க முறைமைகள் பற்றிய விழிப்புணர்வு, செய்நேர்த்திக்கான தொடர்ந்த உழைப்பு, விமர்சனக் கண்ணோட்டம் என்பவற்றை முக்கியத்துவப்படுத்துவதன் மூலமே தரமான எழுத்தாளர்களின் தொகையினை அதிகரித்தல் சாத்தியமாகலாம். அதன் தொடர்ச்சியாகவே, தரமான கலைப் படைப்புகளும் பெருமளவிற் படைக்கப்படக்கூடும். □

செப்ரெம்பர் 11ஆம் திகதி, மகாகவி பாரதியார் மரணமடைந்து 68 ஆவது ஆண்டு தினமாகும். அதையொட்டி அவரின் இரண்டு கவிதைகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

## சுதந்திரப் பயிர்

தண்ணீர்விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ?
ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?
தர்மமே வெல்லுமெனும் சான்றோர்சொற் பொய்யாமோ?
கர்ம விளைவுகள்யாம் கண்டதெலாம் போதாதோ?
மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?
எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?
மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து —
காதலிளைஞர் கருத்தழிதல் காணாயோ?
எந்தாய்! நீ தந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ?
இன்பச் சுதந்திரம்நின் இன்னருளாற் பெற்றதன்றோ?
அன்பற்ற மாக்கள் அதைப்பறித்தாற் காவாயோ?
வானமழை யில்லையென்றால் வாழ்வுண்டோ எந்தை சுயா
தீனமெமக் கில்லை யென்றால் தீனரெது செய்வோமே?
நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலாம் நீதருவாய்
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ?
பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்?
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே?
நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்,
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ?
இன்று புதிதாய் இரக்கின்றோமோ? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ?
நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்,
ஓயுமுனர் எங்களுக்கிவ் ஓர்வரம் நீ நல்குதியே! □

## சுதந்திர தாகம்

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடி யோம்இன்னும் வாடுதல் நன்றோ?

பஞ்சமும் நோயும்நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்சமடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள் செயுங் கடமை யில்லாயோ
ஆரிய! நீயும் நின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே!
வீர சிகாமணி! ஆரியர் கோனே! □

## தரிசனம் !

'கோட்டை பார், கொத்தளம் பார்!'
அன்று
ஆசிரியர் சொல்லிவர
அணுகுந்து பார்த்தேன் நான்!
தூக்கு மரம் கண்டு
துணுக்குற்றது நெஞ்சு!
தொங்கும் மனித உடல்
தோன்றியது கனவில்!

இன்றோ —
மின்கம்பம்
தூக்குமரமாகிய விந்தை
காண உறங்காதென் கண்!

— சோ. ப. □

## உயிர்ப்பு

வசந்தத்தின் வாசலுக்காக
வைகறையைத் தேடும் பூமரங்கள்.....

இளைய நிலவுக்காக
என் சின்னக் குழந்தை.....

ஒரு சூரியனுக்காக
லட்சமாய் விழிகள்.....

புதிய சுதந்திரத்துக்காக
ஆக்கிரமிப்பினுள் நாங்கள்....,

ஒரு பிரளயத்திற்காக
வேதனையுடன் பூமி.

— எஸ். கருணாகரன் □

# மரத்தினில் அழகினை வடிப்பவர்

சிற்பக் கலைஞர் ஐ. விஸ்வலிங்கத்தின் ஆக்கங்களின் கண்காட்சியொன்று, இம்மாதம் 8–11 ஆம் திகதி வரை, யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதையொட்டி, இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

சிற்பக் கலைஞரான ஐயாத்துரை விஸ்வலிங்கம், ஐம்பதுகளில் இலங்கையின் கலைத்துறைக்கு மரச் செதுக்குக் கலைஞராக அறிமுகமானார். தற்போது இவர் வல்வெட்டித்துறையில் வாழ்ந்து வருகிறார். இவர் தனது மாணவப் பராயத்தில் நீர்வர்ணத்தாலான பல ஓவியங்களைப் படைத்ததன் மூலம், ஓர் கலைஞராக அங்கீகாரம் பெற்றார்.

பின்னர் சிறிது காலம் அரச உத்தியோகத்தராக இருந்து இறுதியில் முழு நேரச் சிற்பக் கலைஞரானார்.

ஆரம்ப காலங்களில் இவர் கண்டியை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்த முன்னணிக் கலைஞர்களிடம் பாரம்பரியச் சிற்பக் கலையில் சில அடிப்படைகளைப் பெற்று, தெய்யனுவலையிலிருந்த தன் வீட்டிலேயே சிற்பக் கூடத்தை அமைத்தார்.

அறுபதுகளில் இவர் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பல போட்டிகளில் பங்குபற்றி, விருதுகளையும் பெற்றார் இவருடைய படைப்புகள் 'சங்கீதத்தை மரத்தில் வடித்த' தன்மை வாய்ந்ததாக, கலைவிமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டது.

தனது ரசனைக்கேற்ற விதத்திலேயே மரக்குத்தியை இவர் தெரிவு செய்கிறார். அதில் பேனைக்கத்தி, உளி, என்பவற்றின் உதவி கொண்டு தன் கற்பனையை வடிக்கிறார்.

சில வேளைகளில் கருங்காலி போன்ற கடினமான மரங்களைப் பாவிக்கிறார். ஆனாலும் பெரும்பாலும் முதிரை, பலா போன்ற மரங்களையே தனது ஆண் பெண் உருவங்களைச் செதுக்கப் பயன்படுத்துகிறார்.

டி. பி. கப்பாகொட
தமிழில்:
கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்.

இவர் உல்லாசப் பிரயாணிகளுக்கான சில்லறை விஷயங்களைப் படைப்பவர் அல்லர். இவரது படைப்புகள் பெரும்பாலும் கற்பனை கலந்த கருப்பொருட்களை உள்ளடக்கியன. இவர் பெண்களின் உருவங்களில் வளைவுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கண்டி 'குயீன்ஸ் ஹொட்டேலில்' காணப்படும் எசல பெரஹரா இவரது தரமான படைப்புகளில் ஒன்று. இதில் கண்டி வீதிகளில் வலம்வரும் யானைகள், மேளக்காரர்கள், நடனக்காரர்கள், புதிய பல பரிமாணங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர் இத்தேசிய ஊர்வலத்தினைப் பகுதி அரூபத் தன்மையுடன் (Semi abstract) கலைத்துவ நடுவனைக் (Connoisseur) கவரும் வகையில் படைத்துள்ளார்.

இவரது படைப்புக்களான பாம்பாட்டி; வயோதிபர்கள்; பெண்கள்; விளையாடும் குழந்தைகள்; காதலர்கள் எல்லாம் அழகினை மரத்தில் பொதித்துக் காட்டுகின்றன.

இவருடைய சிற்பங்களில் ஏற்படுத்தப்படும் வளைவுகள் மனித உருவங்களைப் பூரணப்படுத்திக் காட்டுகின்றன. "திறமையாகச் செதுக்கப்படும் அழகிய உருவம் வாழ்வின் சின்னம்" என, இவர் கருதுகிறார்.

இவரது கலையில் இவருக்கு ஏற்படும் வரையறைகளை இவர் நன்கே உணர்ந்திருப்பவர். இருப்பினும், கிடைக்கப்பெறும் சாதனங்களில் தனது முழுத்திறமையையும் பாவித்து மிகச் சிரத்தையுடன், உருவ விளக்கப்பாட்டுடன் அழகினை மரத்தில் செதுக்குகிறார்.

நன்றி: தி ஐலன்ட் (24-2-84)

# இந்திய இசைக்குயில்பற்றி...

விமர்சகர்: கவிக்குயில் என்ற உங்களது பட்டத்தை இனி ஒப்படைத்து விடுவீர்களா?

சரோஜினி நாயுடு: எப்பொழுதோ அதை நான் ஒப்படைத்துவிட்டேனே!

இசைக்குயில் என அழைக்கப்படும் எம் எஸ் சுப்புலக்ஷ்மி நடித்த திரைப்படமொன்று வெளியானபோது, சரோஜினி நாயுடு சொன்னதையே மேலே படித்தோம்.

எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் தாயாரான சண்முகவடிவு புகழ் வாய்ந்த இசைப்பரம்பரையொன்றின் வாரிசாவார். வீணை மீட்டுவதில் இவர் கொண்டிருந்த திறமை இசை ஆசான்களால் வியந்தோதப்பட்டது. ஆனாலும், தேவதாசிக் குடும்பத்தில் பிறந்தமையால் இவரது திறமைகள் குடத்துக்குள் விளக்காகியது.

திறமை வாய்ந்த ஒரு தாய் அடையமுடியாத உச்சங்களை அவரது மகளான எம். எஸ். அடைந்துவிட்டார். அகந்தை மட்டும் அவரை என்றும் அடைந்ததில்லை.

1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16ஆம் திகதி மதுரையில் பிறந்த எம். எஸ். இன் ஆற்றல் வயதுக்கு மீறியதாகவே இருந்தது. பத்து வயதாக இருக்கும்போதே தாயாரோடிணைந்து வழங்கிய இசை நிகழ்ச்சிகள் இவரது எதிர்காலம் பற்றிக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது. இந் நிகழ்ச்சிகள்கூட சண்முகவடிவின் இல்லத்தில் குறைந்த எண்ணிக்கையினரான இசை ஆசான்கள் முன்னிலையிலே நடந்தமை குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

தனது 17ஆவது வயதில், சென்னை சங்கீத அக்கடமியில் முதலாவது முக்கியத்துவம் வாய்ந்த மேடை இசை நிகழ்ச்சியை வழங்கினார். ஆண் வித்துவான்களின் ஆதிக்கத்திலிருந்த சென்னை சங்கீத அக்கடமியில் அரங்கேறியது மட்டுமன்றி, அவர்களுக்குச் சவாலாகவும் அமைந்தது இந் நிகழ்ச்சி. இதிலிருந்து இவரது இசை நிகழ்ச்சிகள் இடையீடின்றித் தொடர்ந்தன.

□ ப. மாலினி □

1936ஆம் ஆண்டு எம் எஸ். இன் வாழ்வில் பெருமாற்றம் நிகழ்ந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிர பங்கெடுத்த கொங்கிரஸ்காரரான T. சதாசிவம் என்பவருடனான சந்திப்பே அது.

வைதிகப் பிராமணரான சதாசிவம் தேவதாசிக் குடும்பத்தில் பிறந்த எம். எஸ். ஐ மணந்துகொண்டமை சர்ச்சைக்குரியதாக அமைந்ததோடு, புகழ்வாய்ந்த காதல் கதையாகவும் அமைந்துவிட்டது.

"செல்வி என்ற நிலையிலிருந்து 150 ரூபா செலவான திருமணத்துடன் திருமதி என்றநிலைக்கு மாற, அவருக்கு நான்கு ஆண்டுகள் தேவைப்பட்டன. அன்றிலிருந்து அவர் எனது உண்மையான தோழியாகவும் நான் அவருக்கு நண்பனாகவும், தத்துவவாதியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி வருகிறேன்." — சதாசிவம்.

'கல்கி' வார சஞ்சிகையை ஆரம்பிப்பதற்கு சதாசிவம் முயன்றபோது அதற்குத் தேவையான பணத்தை ஈட்டுவதற்காக 1941ஆம் ஆண்டு முதன் முதலாக சாவித்திரி திரைப்படத்தில் தேவதை போன்ற அழகுடைய, பாடினியாக நடித்தார்.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக மிகச் சிறந்த குரல் வளமுள்ள இசைநாயகியாகவும்; அழகிய நாயகியாகவும் தமிழ்த் திரையுலகை வசியப்படுத்தியிருந்தார்.

"மீரா" என்ற திரைப்படம் அகில இந்திய ரீதியில் எம். எஸ். ஐ அறிமுகப்படுத்தியது. பாடல்களினால் ஸ்ரீ கிருஷ்ணனைக் காதலிக்கும் இளவரசியின் பாத்திரம் அது. "அவர்தான் மீரா" என்ற விமர்சகர் ஒருவரின் கூற்று எம். எஸ். இன் நடிப்பாற்றலைச் சுருக்கமாகவும்; தெளிவாகவும் கூறிவிடுகிறது.

திரைப்படங்கள் இவருக்குச் செல்வத்தைக் கொண்டுவந்

(11ஆம் பக்கம் பார்க்க)

திசை THISAI சிறுகதைப் போட்டி முதற் பரிசுக் கதை

சென்றவாரத் தொடர்ச்சி

# கோளறு பதிகம்

ரஞ்சகுமார்

என்னுடைய அம்மாவின் தகப்பனார் இன்னும் ஜீவிய வந்தராய் தாடியைக் கோதிக் கொண்டிருக்கும் எனது அப்பு —ஒருதரம் ஒரு பேய்க்கு துவரந்தடியால் விளாசியிருக்கிறார். அந்தப் பேய் வஞ்சம் மறக்காமல் சில இரவுகளில் ஞாபகமாய் வந்து அப்புவின் மென்னியைத் திருகுமாம். உடலைப் பெரும் பாறையாக அழுத்துமாம். முறித்து எடுக்குமாம். அப்பு சில இரவுகளில் "ஊ ஊ" எனத் திணறுவதையும் உடலை முறுக்குவதையும், வாய் பிதற்றுவதையும் நானே நேரில் கண்டிருக்கிறேன். தொடர்ந்து சில நாடகளாக அப்புவுக்கு காய்ச்சல் காயும். அப்புவுக்கும் "இங்கிலீசு மருந்து"சகும் ஒத்துவராது. காய்ச்சல் குடிநீரை அம்மா சுண்டச் சுண்டக் காய்ச்சி ஒரு துண்டு பனங்கட்டியுடன் கொடுப்பாள். அப்பாவோவெனில், நல்ல தென்னஞ்சாராயத்தில் 'ஒரு அரை' எடுத்து வந்து அம்மாவிடம் கொடுத்து விடுவார். கிழவனார் ஆசையால் கண்கள் மின்ன சாராயக் கிளாசை பதபக்குவமாக பற்றுவார்.

"போடா அங்காலை...... எளிய வடுவா, வாய் பாக்காமல்..." என்று என்னை விரட்டுவார். பிறகு, தொண்டையைச் செருமுவதும், நாவைச் சப்புக் கொட்டுவதும் கேட்கும்.

சற்று நேரத்தில், "இஞ்சை வாடா மேனே..." என கிழவனார் ஆசையாகக் கூப்பிடுவார். அவரது முகத்திலிருந்தும் தாடியிலிருந்தும் சாராய நெடி அடிக்கும் ஒளியிழந்த கண்கள் சிமிட்டும். பல்லிழந்த பொக்கை வாய் இனிக்கும். துவரந்தடியால் பேய்க்கு விளாசிய கதை நூறுவது தடவைக்கு மேல் எனக்கு விஸ்தாரமாகச் சொல்லப் படும். கேடகக் கேட்க அலுக்காத கதை. அப்பு கதை சொல்லும் பாணியே அலாதி. அடிக்கடி நான் 'ஊம்' கொட்டி எனது ஆர்வத்தைக்காட்டி, அவரது வீரத்தையும் மெச்ச வேண்டியது அவசியம்!

அப்பு கல்வீட்டினுள் படுப்பது கிடையாது. வேப்பமரத்தின் குளிர் நிழலின் கீழ் கிழவனார் தமக்காக ஒரு கொட்டில் போட்டு வைத்திருக்கிறார். தீராந்திகளில் கலப்பையும், பிக்கானும், நுகக்காலும், நாலைந்து துவரந்தடிகளும், இரும்புப் பூண் இட்ட கரிய ஏழுமுள்ளுக் கொட்டனும் சொருகப்பட்டிருக்கும். பாம்புகள் மாதிரி மாடுகளின் கழுத்துச் சங்கிலிகள் வளைந்தபடி தூங்கும். ஒரு பழைய உறுதியான நார்ப்பெட்டிக்குள் லாடங்கள், மாட்டின் கழுத்துச் சதங்கைகள், இன்னும் பல கிழவனாரின் அரிய பொக்கிஷங்கள் எல்லாம் உண்டு. அவையெல்லாம் அவருக்கு மிக இனியவை, அவரது வாலிபத்தின் நினைவுகளைத் தூண்டுவனவல்லவா? அவை எவ்வளவு கதைகளை அறிந்திருக்கும்? எவ்வளவு பேய்களுடன் அப்புவுடன் தோளோடு தோள் நின்று போராடியிருக்கும்!


"அப்ப நான் நல்ல வடக்கன் மாடுகள் ஒறணை வைச்சிருந்தனான் ... என்னைவிட உயரம்......மா வெள்ளை நிறம் ......ஒரு நாளைக்கு ஒரு கடகம் பருத்திக் கொட்டையும் புண்ணாக்கும் வேணும்.. ..." என்று கதை தொடங்கும்.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது, எங்களது வீட்டுக்கு அப்போ மதில் கட்டப்படவில்லை. அலம்பலும் பனையோலையும் கொண்டு மிக நெருக்கமாகவும் கலைநேர்த்தியுடனும் அடைக்கப்பட்ட அழகிய வேலி தான் இருந்தது. அந்தக்காலத்தில், எங்களூரில் தோட்ட வேலையும் வயல் வேலையும் குறைந்த வெயில் மிகுந்த ஆனி, ஆடி மாதங்களில், எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து "அலம்பல் காட்டுக்கு" வண்டி பூட்டிப் போவார்கள். போக முதல் வைரவர் கோயிலில் பொங்கல். ஒரு கிழமையோ பத்து நாட்களோ பயணம். பானை சட்டிகள், அரிசி, நல்லெண்ணெய், பருப்பு, கருவாட்டுடன் போவார்களாம்.

ஒருதடவை மற்றவர்களை விட நல்ல அலம்பர் வெட்ட வேண்டும் என்ற அவாவில் அப்பு காட்டுக்குள் வெகு தூரம் போய் விட்டார். அப்புவுக்கு அப்போ நல்ல வாலிபம். நல்ல உடல் கட்டு. கல்யாணமாகி, எனது அம்மா பிறந்து அப்போது தான் தவள்கிறாளாம். அப்புவின் வாழ்க்கையில் உல்லாசம் வீசுகின்ற காலம். நல்ல பாரமாக அலப்பர் வெட்டி விட்டார். மற்றவர்களுக்கெல்லாம் பொறாமை அப்புவையும் அவரது பிரசித்தி பெற்ற 'வடக்கன்' களையும் விட்டு விட்டு அவர்கள் முன்னே வண்டிகளை ஓட்டிச் சென்று விட்டார்கள். அப்பு இரண்டு மூன்று 'கட்டை' பின் தங்கி விட்டார். அக்காலங்களில் அப்புவுக்குப் பயமே கிடையாது. வாலிபம் அல்லவா?

நிலவு பகல் போலக் காய்கிறது. அப்போ தார் ரோட்டுக்கள் கிடையாது. குண்டுங் குழியும் நிறைந்த மக்கி ரோட்டுகளும், வண்டிப் பாதைகளும் தான். வண்டி நிறைந்த பாரம். 'வடக்கன்'கள் முக்கித் தக்கி இழுக்கின்றன. வண்டி அப்படியும் இப்படியுமாக இலேசாகத் தாலாட்டுகிறது. பாதையின் இருபுறமும் தாழம் புதர்கள் மலர்ந்து 'கம்' மென்ற வாசனை. கண்டல் மரங்கள் நீருக்குள் முக்குளித்து, நிமிர்ந்தன. நீரில் கண்டல் சாயம் ஊறி தேயிலைச் சாயம் போல மனோரம்யமான சிவந்த நிறம் காட்டுகிறது. காற்று வேறு மெல்ல வீசிற்று. தனிமை தந்த சலிப்பும் ஏக்கமும் வாட்டுகிறது. அப்புவுக்கு பாட்டு வந்தது. பாடத் தொடங்கினார்.

வயல் வெளிகளும் சிறுபற்றைகளும் மாறிமாறி வருகின்றன. அப்புவை நோக்கிக் கையசைத்து பின்னால் போய் நின்று திரும்பிப் பார்த்தன. வயல் வெளிகளினூடாக



யாரோ ஒருவன் நொண்டி நொண்டி வருகிறான் செம்பாட்டு மண்ணில் விழுந்து புரண்டவன் போல பழுப்பு நிற வேட்டி கட்டியிருக்கிறான். வந்தவன், வாய்பேசாமல் பின்னணியத்தில் பிடித்து தூங்குகிறான். பின் பாரம் மிக அதிகரித்து மாடுகளை தூக்க எத்தனித்தது. மாடுகளின் வாயிலிருந்து வெண்ணுரை கக்கிற்று. அப்பு திட்டினார்.

"வேசை பிள்ளை, எடடா கையை... துவரங்கம்பாலை வெளுப்பன்" அவன் முன்னால் வந்தான். வந்தவன், நுகத்தடியில் ஏறி உட்கார்ந்தான். அவனுடலிலிருந்து கெட்ட நாற்றம் மலநாற்றம் வீசிற்று. மாடுகள் வெருண்டடித்தன கதறின. பாரம் தாங்காமல் முன்னங்கால்களை மடித்து விழுந்தன அப்புவுக்குச் சினம் பொங்கிற்று.

"எளிய வடுவா..." என உறுமியபடி, ஆசனத்திலிருந்தபடியே எட்டி அவனது முதுகில் துவரங்கம்பால் சாத்தினார். கூர்மையான குரலில் ஓலமெழுப்பியபடி அவன் பாய்ந்து இறங்கினான். அப போது, கோடை வானம் கிழியும்படி ஒரு மின்னல் தெறித்தது. மின்னல் ஒளியில் வந்தவனை அப்பு நன்றாகக் கண்டார் வானத்துக்கும் பூமிக்குமாக அவன் பிரமாண்டமாக வளர்ந்து கொண்டிருந்தான். ஒரு நொடி கழித்து பெரும் இடியோசை கேட்டது. அத்துடன் கூடவே அப்புவின் நெஞ்சில் பலத்த உதை கிடைத்தது. வண்டியின் துலாவில் அப்பு மயங்கிச் சாய்ந்தார் எப்படி வீடு வந்து சேர்ந்தோமென அப்புவுக்கு, இப்போதும் தெரியாதாம். அதெல்லாம் அவாது பாதை பழகிய அருமையான வடக்கன் மாடுகளின் மகிமை என நன்றியுடன் சொல்லுவார்.

"நீ பேயைக் கண்டா என்னடா செய்வாய்?" என்று ஏகத்தாளமாய்க் கேட்பார்.

"பயத்திலை கழிஞ்சு போடுவாய்" என பொக்கைவாய் சிரிக்கும்.

"இப்ப உந்த மெஷினுகள் வயலுகளுக்கை ஒண்டு பாதி சாமமெண்டும் பாராமல் உழுது உழுது பேய் பிசாசெல்லாம் எந்தப் பக்கம் போனதெண்டு சொல்லேலாமல் போவிட்டுது" என மிக வருத்தத்துடன் முத்தாய்ப்பு வைப்பார்.

இதையெல்லாம் நான் சொல்ல சொல்ல தேவன் படுத்தபடி கேட்டுக் கொண்டிருந்தான். நான் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தேன். வெளியேயிருந்து இரவின் சூக்குமமான மெல்லிய சந்தடிகள் கேட்டன. இருந்தாற் போல், ஒரு நாய் ஊளையிட்டழுதது. பிறகு தெரு நாய்களும் வீட்டு நாய்களும் ஒன்றாய்ச் சேர்ந்து பெருங்குரலில் குரைத்தன எங்களது வீட்டின் முன்புறமாக சில நாய்கள் பயந்தடித்து ஓடிய அரவத்தை தெளிவாகக் கேட்டோம்.

ஒரு வெடிச்சத்தம் .....
பிறகு சலனங்கள் அடங்கின. மயான அமைதி.

ஜன்னலைத் திறந்து பார்த்தோம். தெருவில் சிலர் கனமாக நடந்து போவதைக் கண்டோம. தெருவின் இரண்டு ஓரங்களிலும் அவர்கள் வரிசையாகப் போயினர். நிழல்கள் அசைவது போல அவர்கள் அரவமின்றிப் போயினர். சூழல் முழுவதும் அச்சப்படும் படியான ஒரு தோற்றம் ஏற்பட்டது.

யாரோ ஒருவன் பாடினான் போலும். அர்த்தம் புரியாத வேற்று மொழியில் ஒரு முரடான கரகரத்த குரல்...... ஆனால் ஆத்மார்த்தமாக உணர்ச்சியைச் சிந்தும் குரல் பாடிற்று. அனேகமாக அது ஒரு விரகந்தெறிக்கும் காதல் பாடல்.

விளக்குகளை அணைத்து விட்டு சிறு பெருமூச்சுகளுடன் படுத்தோம்.

சற்று நேரத்தில், சற்றுத் தூரத்திலிருந்து இன்னொரு வெடிச்சத்தம் கேட்டது.

O O

விடிந்தது. தேவன் மேலும் சில நாட்கள் என்னுடன் தங்க விரும்புவதாகச் சொன்னான். எனது சைக்கிளை சில நாட்களுக்கு இரவல் தரும்படியும் கோரினான்.

மிகச் சில நாட்களே என்னுடன் தங்கினான். நன்கு இருட்டிய பிறகு, சாப்பாட்டுப் பார்சலுடனும், அலைந்து திரிந்த களைப்புடனும், துர்மரணங்களைப் பற்றிய செய்திகளுடனும் வருவான். இந்தச் சில நாட்களில் தேவனது பல நண்பர்கள் எனக்கு அறிமுகமானார்கள்.

தேவன் என்னை விட்டு மறுபடியும் பிரிந்து போன பிறகு, வீட்டில் ஒரு விசித்திரமான விரும்பத்தகாத மாற்றம் ஏற்பட்டிருந்ததை உணர்ந்தேன். இப்போ, வாடைக் காற்று மாறி சோளகம் புறப்பட்டு விட்டது. இரவு நேரங்களில் எனக்கு தெளிவற்ற கனவுகளும், விவரிக்க முடியாத பயப்பிராந்திகளும் ஏற்பட்டன. வெளியே உக்கிரமாகச் சோளகம் வீசிற்று.

யன்னல்களும், கதவுகளும் 'தடபட' வென தாமே திறந்து அடித்துக் கொண்டன. யாரோ முனகுவதாயும், அங்குமிங்கும் நடமாடுவதாயும் தோன்றியது. சிலவேளைகளில் குளியலறையில் நீர் ஓடும் சத்தம் கூடக் கேட்டது. எழுந்து போகத் துணிவில்லாது போர்வையால் முகத்தை மூடியபடி படுத்துக் கிடப்பேன்.

ஒரு தரம், ஒரு கனவு கண்டேன்.

தேவனை யாரோ சிலர் கூட்டிக் கொண்டு போவது போல தெளிவற்ற காட்சி அது மார்கழி மாதமா? ஒரே பனிப்புகார் தேவன் மறுபடியும் மெலிந்திருக்கிறான் அவனது மேலவல் சேட் இல்லை வலையை தோள்கள் மீது போட்டிருக்கிறான் கிழிந்து போன பழைய சாரன் உடுத்தியிருக்கிறான். அவனுக்குக் கால்கள் இல்லை. அந்தரத்தில் தொங்குகிறான். ஒரு நிறைந்த நீர்நிலைப்பக்கமாக அவர்கள் போகையில், தேவன் நீருக்குள் இறங்க ஆரம்பித்தான். அவர்கள் "அடே தம்பி ...... வாடா ......" என நைச்சியம் பண்ணும் குரலில்

(11ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றும் உலக நாடுகளில் அபிவிருத்தியும் சூழலும்

## — புதிய நோக்கு

இக்கட்டுரை, நோர்வே விவசாயப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் கலாநிதி என். சண்முகரட்ணம் அவர்கள் கடந்த யூன் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆற்றிய, **மூன்றும் உலக நாடுகளில் அபிவிருத்தியும் சூழலும் பற்றிய புதிய நோக்கு** எனும் ஆங்கில உரையின் தொகுப்பு ஆகும்.

உலக நாடுகளின் அபிவிருத்திப் போக்குகள் சூழலை மாசடையச் செய்யும் துக்ககரமான நிலைமைக்கே இட்டுச் செல்லும் போல் தோன்றுகிறது. இவ் ஆபத்தான நிலைமை வடக்கு நாடுகளுக்கு (யப்பான் உள்ளிட்ட மேலைத்தேய அபிவிருத்தி அடைந்த நாடுகள்) ஒரு விதமாகவும், தெற்கு நாடுகளுக்கு (அபிவிருத்தியடையாத நாடுகள்) ஒரு விதமாகவும் வேறுபடுகிறது.

வரலாற்று ரீதியாகவும் இவ் வித்தியாசம் காணப்படுகிறது. சூழலின் ஆபத்தான நிலைமை வடக்கில் கடந்த 200 வருடங்களாக ஏற்பட்ட கைத்தொழிலாக்க அபிவிருத்தியின் விளைவு என்றும், தெற்கிலோ அபிவிருத்தியின்மையின் விளைவு என்றும் குறிப்பிடலாம். காலனித்துவ விரிவாக்கம், வணிக கைத்தொழில் வளர்ச்சி, முதலாளித்துவம் போன்ற வழிகளில் தெற்கு இணைக்கப்பட்டபோதும், வடக்கைப்போல் கைத்தொழில் புரட்சிகளைத் தெற்கு கண்டதில்லை.

விவசாயப் பசுந்தரைகள், இயற்கைக் காடுகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் விவசாய நடவடிக்கைகளால், சூழல் மதிப்பிழக்கும் ஆபத்து உருவாக்கப்பட்டது. இது தேசிய, பிராந்திய வித்தியாசங்களைக் கொண்டிருக்கிறது, காட்டு நிலங்களை ஏற்றுமதிப்பொருட்களை உற்பத்திபண்ணும் நிலங்களாக்கியமை, கனிப்பொருள் வளங்களை ஏற்றுமதிக்காக மிகுதியாக அகழ்தல் என்பனவற்றை இது உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, வெளிநாட்டுச் செலாவணியை மட்டும் கருத்தில் கொண்டு பொற்சுவானா நாட்டுக் கனிய வளங்கள் மிக வேகமாக அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால் அந்நாட்டின் நீண்டகாலப் பொருளாதாரத் திட்டம் பாதிப்புறும். அதே வேளையில் தென் கொரியா முற்று முழுதாக தொழிற்சாலை மயப்பட்ட பொருளாதாரத் திட்டத்தைப் பேணுவதால் சூழல் மிகவும் மோசமாகப் பாதிப்புறுகிறது.

தெற்கு நாடுகளில் சூழலுக்கு ஏற்படும் ஆபத்தானது, தமது வாழ்வுக்கு சூழலிலேயே தங்கியுள்ள பெரும்பாலான மக்களின் உயிர் வாழும் பிரச்சினையாகும். தெற்கின் பெரும்பாலான நாடுகளின் அரசியல், பொருளாதார மாற்றங்கள், வெளிச்சக்திகளால் காலனித்துவ ஆதிக்க வடிவில் ஏற்படுத்தப்பட்டன. இவ்வெளிச்சக்திகள் உள்நாட்டு தேசிய சக்திகளுடன் இணைந்து ஒரு குறிப்பிட்ட சொத்து உறவுகள், மூலவழக்கட்டுப்பாடு, சுரண்டல் என்பனவற்றை உருவாக்கின. இக்கடந்த கால நிகழ்வுகளால் இன்றும் தெற்கின் பல நாடுகள் கஷ்டமுறுகின்றன. நிகழ்காலத்தில் தேசிய அதிகார அமைப்புகளும் கடந்த கால, நிலைமையையே மேலும் ஊக்குவிப்பதால், 'சூழல் அகதிகளை' மனிதாபிமான ஒழுங்கமைப்புக் குழுக்களினது முகாம்களில் தஞ்சம் புக வைத்துள்ளது, அத்தோடு அந்நாடுகளை பஞ்சம், அபிவிருத்தியின்மை என்பவற்றிலிருந்து இன்றும் விடுவிக்க முடியாமையை எடுத்தியம்பி நிற்கின்றன.

சூழல் பாதிப்பு காலனித்துவ ஆட்சியால் மாத்திரம் ஏற்பட்ட நிலைமையன்று. காலனித்துவ ஆதிக்கத்துள் நேரடியாக உட்படாத நேபாளம், எத்தியோப்பியா ஆகிய நாடுகள் உட்பட்ட மூன்றும் உலக நாடுகளில் கூட, சூழல் ஆபத்தான நிலைமையை எதிர்நோக்கியுள்ளது.

அபிவிருத்தியும் சூழலும் பிரிக்க முடியாதவை. தெற்கில் சூழல் பாதிப்பு மக்களின் சமூக பொருளாதார, கலாசார வாழ்வியல் நிலைமைகளுடன் இணைந்து உள்ளன. இரு போக்குகளும் ஒன்றையொன்று மீளவலியுறுத்துகின்றன. ஆழமாக நோக்கினால் உண்மையான காரணங்கள், சர்வதேச, தேசிய அரசியல், பொருளியல், கட்டமைப்பிலிருந்தே உருப்பெறுகின்றன என்பதைக் காணலாம்.

**கந்தையா ஸ்ரீகணேசன்**
தொகுப்பு:

தெற்கில், சூழல் புனர்வாழ்வு என்பது அப்பகுதி மக்களின் சமூக பொருளாதார கலாசார நிலைமை மாற்றங்களுக்கு அப்பாற்பட்டதாக அமைய முடியாது. அபிவிருத்தி குறைந்த நாடுகள் எதிர்நோக்கும் சவாலானது மக்களது வாழ்க்கையினைத் தரமான திருத்தத்துடன் சூழல் புனர்வாழ்வை இணைக்கும் சமூக மாற்றத்தைத் தெரிவு செய்யும் வழி முறைகளுடன் தொடர்பு கொண்டது: எப்படியிருப்பினும் பெரும்பாலான அபிவிருத்தி குறைந்த நாடுகளில் தற்போதைய வழிமுறைகள் இந்தச் சவாலை எத்தாக்கமான அளவுகளிலும் ஏற்கமுடியாத தன்மையிலுள்ளன. மாறாக, அவை அந்நாடுகள் எதிர்நோக்கும் சிரமங்களை மோசமாக்கவே செய்யும்.

சூழல் மக்களிடமிருந்து கொள்கைத் திட்டமிடுவோர்களாலும், நிபுணர்களாலும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது. இக்குறிப்பு சூழல் பாதுகாப்பு சட்டரீதியான, அதிகார அணுகுமுறையை நாடுவதற்கு வழிவகுத்தது. இது மோசமான பலாபலன்களையே அளித்தது; கிராம ஏழைகளை அச்சூழலிருந்து அந்நியப்படுத்துகிறது. இதற்கு மாறாக, இயற்கைச் சூழலுடன் இயைந்து மக்களை வாழவைக்கும் இயக்கங்கள் மூன்றும் உலக நாடுகளில் தோன்றியுள்ளன. குறிப்பாக சிப்கோ எனுமியக்கம் இந்தியாவில் இப்போக்கை ஊக்குவிக்கிறது. 'சிப்கோ' பெண்களின் பெரும் பங்களிப்பைக் கொண்டது. காட்டு மரங்களையும் உயிர்சூழலையும் பாதுகாக்கும் அதன் நடவடிக்கைகளுக்காக 1987 இல் ''மாற்று நோபல் பரிசு'' இவ்வியக்கத்துக்கு அளிக்கப்பட்டது.

சூழல் அழிவுக்கு இட்டுச் செல்லும் இன்னொரு போக்கு, ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பொதுக் காணிகளை அரசாங்கங்கள் தனியுடைமையாக்குதலும் மூலவளங்களை அதற்குப் பயன்படுத்தலும் என்ற வகையில் காணப்படுகிறது. உள்ளூர் நிலைமைகளுக்கேதுவான அபிவிருத்தித் திட்டங்கள் அநேக நாடுகளில் இல்லை. அத்தோடு விவசாய மற்றும் தொழிற்துறை அபிவிருத்திகளுக்கு செலவழிப்பதைவிட இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்வதில் அதிக முதலீட்டை இடுகின்றன.

சூழல் தரத்தைப் பேணுவதில் காடுகள் மிகவும் வலிமையான காரணியாக விளங்குகின்றன. ஒவ்வொரு வருடமும் 11 மில்லியன் ஹெக்டர் உஷ்ண வலயக்காடுகள் அழிக்கப்படுகின்றன. வடக்கிலுள்ள நாடுகள் காடுகள் அழிக்கப்படாதிருப்பதற்குச் சட்டங்களை இயற்றியுள்ளன. புதிய காடுகளைத்தோற்றுவித்தல், காட்டுப் பாதுகாப்பு போன்ற இந்நாடுகளின் திட்டங்கள், உஷ்ணவலய நாடுகளிடமிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்யும் மரங்களிலேயே தங்கியுள்ளன. காடு வளர்த்தலில் யப்பான் முன்னணியில் நிற்கின்ற அதே வேளையில் மத்திய அமெரிக்கா, அமேசோனியா, மேற்கு ஆபிரிக்க உஷ்ண வலயக்காடுகளில் ஒரு கண் வைத்துள்ளது.

பொருளாதாரத் திட்டங்கள், பலநாடுகளில் வர்க்க நலன் பேணும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அவை சூழல் நலன்களைக் கவனிக்கா. இதனால் சூழல் பாதுகாப்புக்கு பல திட்டங்கள் பல மட்டங்களில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இயற்கைச் சமநிலை பேணி பொருளாதாரம் ஈட்டும் கொள்கைகள் இயற்கைச் சமநிலையை முக்கியத்துவப் படுத்தும் இயற்கைச் சமநிலை அடிப்படைவாதம் (Eco - Fundamantalism), பொருளாதாரம் மட்டும் ஈட்டும் கொள்கைகள் (Extractive Economic Policies), மூலவளங்களைப் புதிதாய் உருவாக்கும் திட்டங்கள் Renewable Resources) எனப் பலவாறாய் பொருளியல் திட்டங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் சமூக மாற்றக் கருதுகோளை முன்வைத்த கார்ல் மார்க்ஸின் 9ஆம் நூற்றாண்டு மனித - மனித உறவு முறையை இன்று மக்கள் - மக்கள் உறவுமுறை (Man - Man relationship)—(People - People relationship) எனக் கொண்டால் சூழல் அகதிகளை மேலும் உருவாக்காத ஒரு சமூக ஒருங்கியைபைபேண உலகைக் தயார் படுத்தலாம். மேலும், பெண்ணிலைவாதிகள் கூட இன்று சூழல் நலன் பேணுவதில் தங்கள் பங்கைச் செலுத்த முன்வருகின்றனர்.

ஆக, இங்கு ஒரு சமஆய்வு தேவைப்படுகிறது. அபிவிருத்தி வாதங்களும், சூழல் பாதுகாப்பு வாதங்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பணப்பயிர்களை உற்பத்தி பண்ணுவதால் மட்டும் சூழல் பாதிப்புறுகிறது என்பதல்ல; ஆனால் அவைகளின் உற்பத்தி மற்றும் பரிமாற்றங்களை ஆளும் சமூகத்தொடர்பு முறைமைகளே அதீத சுரண்டல், சூழல் பாதிப்பு என்பனவற்றுக்கு வழிவகுத்துள்ளன. பணப்பயிர்களையும், உப - உணவுப்பயிர்களையும் உற்பத்திபண்ணுவோர்களையும் சூழல் பாதுகாப்பு நிபுணர்களையும் இணைக்கும் ஆராய்ச்சி அமைப்பு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அத்தோடு சூழல் பாதிப்பை இயன்றளவில் இல்லாமல் செய்யும் அபிவிருத்தித் திட்டங்களை அல்லது புதிதாக மூலவளங்களைத் தோற்றச் செய்யும் வழிவகைகளை அமுலுக்குக் கொண்டுவர, தெற்கு நாடுகள் முனையவேண்டும். □

# நடிப்புச் சுதேசிகள்

த. இந்து

செப்ரெம்பர் 11, மகாகவி பாரதியார் மறைந்த 68 ஆவது ஆண்டு தினமாகும். அதையொட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.

பாரத நாட்டின் விடுதலைப் போர் நடந்த காலத்திலே நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்பன இல்லாமல் வெறும் போலி வாழ்க்கை வாழ்ந்த மக்கள் சிலரின் நடிப்பைக் கண்ட பாரதியார் அவர்களை இகழ்ந்து பாடிய கவிதைகளை நடிப்புச் சுதேசிகள் என்னும் பகுதியில் காணலாம். பொது மக்களின் மதிப்பைப் பெறுவதற்காப் போலிவேடம் பூண்டு நாட்டுப் பற்றுக் கொண்டவர்கள்போல் நடித்து வாழ்ந்த நயவஞ்சகச் சுதேசிகள், நாட்டை அடிமைப்படுத்தி ஆளும் பகைவர்கள் ஆற்றுகின்ற கொடுமைகளிலும் பார்க்க, பொதுமக்களை ஏமாற்றி வாழ்கின்ற கொடுமை நஞ்சினும் கொடியது என்பதே பாரதியாரின் நெஞ்சத் திரையில் நிழலாடும் கருத்தாகும்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி,
வஞ்சனை சொல்வாரடீ! –
கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடீ!

மனத் திண்மையும் நேர்மையும் மாறாத வாழ்வு இல்லாதவர்களாய் வாய்ச் சொல்லில் மட்டும் பொதுமக்களை ஏமாற்றி வஞ்சிக்கின்ற நடிப்புச் சுதேசிகளின் போலி வாழ்க்கையை பாரதியார் வெறுக்கிறார்.

கூட்டத்தில் கூடி நின்று
கூவிப்பிதற்றலன்றி,
நாட்டத்திற் கொள்ளாரடீ!
– கிளியே!
நாளில் மறப்பாரடீ!

சுதந்திரத் தொண்டர்கள் கூடுகின்ற மகாநாடுகளில் தாமும் கூடிநின்று நாட்டுப் பற்று உள்ளவர்கள் போல் நடித்து வெற்றுரவாரம் செய்தலன்றி அங்கு நிகழ்ந்த செயல் திட்டங்களில் எட்டுணையும் கருத்து இல்லாமல் கேட்ட அப்பொழுதே மறந்து மக்களை ஏமாற்றுகின்ற நடிப்புச் சுதேசிகளின் செயல் கூட்டத்தில் கோவிந்தா என்பது போல நாட்டத்தில் கொள்ளாத வெற்று ஆரவாரம் என்கிறார்.

சொந்த அரசும் புவிச் சுகங்
களும் மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ!–
கிளியே!
அலிகளுக் கின்பமுண்டோ?

ஆண் தன்மையும் பெண் தன்மையும் இல்லாத அலிப் பிறவிகள் வாழ்க்கை இன்பத்தை உணராமல் வாழ்வது போல, நாட்டுப்பற்று அற்றுநடிப்புச் சுதேசிகளும் சொந்த அரசின் சிறப்புகளையும் சுதந்திர வாழ்வின் பெருமையை அறியாமல் அகக் குருடர்களாய் வெற்று வாழ்வு வாழ்கிறார்கள் என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

கண்கள் இரண்டிருந்தும்
காணுந்திறமையற்ற
பெண்களின் கூட்டமடீ! –
கிளியே!
பேசிப் பயனென்னடீ!

இரண்டு கண்களும் ஒளியோடு நிரம்பி இருக்கப் பெற்றும் நாட்டுப் பற்றையும் சுதந்திர வாழ்வையும் தமது அறிவினால் ஆராய்ந்து தெளிந்து கொள்ள முடியாமல் செயலற்றுக் கிடக்கின்ற நடிப்புச் சுதேசிகளை, மூடக்கட்டுப்பாடுகளினால் அடக்கி ஒடுக்கித் தம்மை அடிமைப் படுத்தவும் அக்கட்டுப்பாடுகளை அறுத்தெறிந்து விடுதலை பெற முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்ற பெண்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# உருளும் இலங்கை

## முதலியாரின் கண்டுபிடிப்பின் காரணம்

இலங்கை ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதற்கான வழிவகைகள் இலங்கை அரசியல் அமைப்புத் திட்டத்தில் இல்லையென்றும் எனவே அதற்கான அரசியலமைப்புத்திட்டத் திருத்தம் அவசியம் என்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி வெளிநாட்டுப்பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போது மேலும் கூறியதாவது அமெரிக்க, பிரெஞ்சு ஜனாதிபதிகளின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதற்கான ஏற்பாடுகள் அந்நாடுகளின் அரசியல் அமைப்புத் திட்டங்களில் உண்டு. ஆனால் இலங்கை ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்தக்கூடியதற்கான வழிவகை எமது அரசியற் திட்டத்தில் இல்லை என்று விபரிக்கிறார்.

இன்றைய இவ்வரசியல் அமைப்புத்திட்டம் ஜே. ஆரினால் உருவாக்கப்பட்டது. ஜே. ஆரை ஜனாதிபதியாகக் கொண்டு இவ்வரசியல் அமைப்புத் திட்டம் இரு பதவிக்காலங்கள் அமுற்படுத்தப்பட்டுள்ளது. அந்த இரு பதவிக்காலங்களிலும் இந்த லலித் அத்துலத்முதலி ஜே. ஆரின் கீழ் இந்த அரசியல் அமைப்பிற்கு இணங்க அமைச்சராக இருந்தவர். அப்போதெல்லாம் இந்த ஜனாதிபதிக்கு இருந்த எல்லை அற்ற அதிகாரங்களைப்பற்றியும், அரசியல் அமைப்புத் திட்டத்தில் உள்ள குறைகளைப் பற்றியும் கூறாதவர் இப்போது பிரேமதாஸ ஜனாதிபதியாக இருக்கும்போது மட்டும் ஏன் வாய்திறக்கத் தொடங்கியுள்ளார்.

**சரண்யன்**

பிரேமதாஸ—லலித் முரண்பாடு பற்றி “திசை” பல கட்டுரைத் துணுக்குகளை தந்திருந்தமை வாசகர் அறிந்ததே. அப்பின்னணியில் வைத்து இதனை வாசகர்கள் விளங்கிக் கொள்வார்களாக. சென்ற வாரத் திசையில், இலங்கையிலுள்ள ஜனாதிபதி முறைமை, பிரெஞ்சு ஜனாதிபதி டீகோலால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி முறைமையைப் பின்பற்றியது என்று வெளியான செய்தியும் கவனிப்புக்குரியது. □

## வகையற்ற அரசியல் அமைப்பு

நெருக்கடி மிக்க இன்றைய கட்டத்தில் அரசியல் அமைப்புத்திட்ட வரம்புக்குள் நின்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத அளவுக்கு இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்புத்திட்டம் பெரும் குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

நடைமுறையிலுள்ள ஜே.ஆர் அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும், முப்படைகளின் தளபதியும், மந்திரி சபையின் தலைவரும், ஒருவரேயான ஜனாதிபதியே. இதற்கு முன்னைய சோல்பரி (1947), கொல்வின் (1972) அரசியல் அமைப்புத் திட்டங்களின் படி அரசின் தலைவரும் முப்படைகளின் தளபதியும் மகாதேசாதிபதி அல்லது ஜனாதிபதி நின்ற ஸ்தானத்தில் உள்ளவராக இருக்க, அரசாங்கத்தின் தலைவரும் மந்திரி சபையின் தலைவரும் பிரதம மந்திரி என்ற ஸ்தானத்தில் உள்ளவராக இருப்பார்.

சோல்பரி அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ், அல்லது கொல்வின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ், நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் அதனைக் கையாள்வதனால் ஏற்படும் பாதகத்தினை ஆளும் கட்சி தனது தலையிற் சுமக்காது தவிர்ப்பதற்கும், அதேவேளை பாராளுமன்றத்தைக் கலைக்காது பிரச்சினை தீர்ந்த பின் தொடர்ந்து அக்கட்சி பதவி வகிப்பதற்கும் உரிய வாய்ப்பு இருந்தது.

1958ஆம் ஆண்டு இனக்கலவரம் ஏற்பட்ட போது, அதனை இராணுவத்தைப் பயன்படுத்தித் தான் கையாள்வதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தனக்கு எதிர்ப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு, பிரதமராயிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆட்சிப் பொறுப்பை மகாதேசாதிபதியாக இருந்த ஒலிவர் குணதிலகாவிடம் ஒப்படைத்தார். முப்படைகளையும் பயன்படுத்தி கலவரத்தை ஒலிவர் அடக்கிய பின்பு மீண்டும் பண்டாரநாயக்கா நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அந்த மகாதேசாதிபதி அடிப்படையில் ஒரு கட்சிக்குப் பொறுப்பானவர் அல்ல. அவரின் பதவிக்கு வாக்கு வேட்டையும் அவசியமில்லை. எனவே பிரச்சினையை பயமின்றி அவர் கையாள முடிந்தது.

தற்போதுள்ள ஜே. ஆர். அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி ஆளும் கட்சி அவ்வாறு நடந்து கொள்ள வாய்ப்பில்லை. எனவே தலைக்கு வரும் ஆபத்தை தலைப்பாகையுடன் போக வைக்கக்கூடிய மார்க்கம் இந்த அரசியல் அமைப்பின் கீழ் பிரேமதாஸவிற்கு இல்லை. இதனால் சகல சுமைகளையும் தானே சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். □

## நடிப்புச்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தோடு பாரதியார் ஒப்பிடுகின்றார்.

அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ!
– கிளியே !
ஊமைச் சனங்களடீ !

அச்சம், பேடித்தனம், அடிமை செய்யும் அற்பபுத்தி என்பவற்றைத் தமக்குரிய உயர்ந்த குணங்களாகக் கொண்டு, உண்மை அறிந்து உரையாமல் பயனில்லாதவற்றையே மிகவும் பாராட்டிப் பேசுகின்ற நடிப்புச் சுதேசிகளை ஊமைச் சனங்களெனப் பழித்துரைக்கிறார்.

மானம் சிறிதென்றெண்ணி
வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலகத்தனில்! –
கிளியே !
இருக்க நிலையுமுண்டோ?

உயிரினும் சிறந்த மானத்தை சிறிதாக மதித்தும் நிலையில்லாத வாழ்வை பெரிதாக மதித்தும் மான உணர்ச்சி இன்றி வாழ்கின்ற நடிப்புச் சுதேசிகள் சுதந்திர நாட்டில் இருக்கத் தகுதி அற்றவர்கள் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடீ !
– கிளியே !
செம்மை மறந்தாரடீ ?

நடிப்புச் சுதேசிகள் நாட்டு மக்களை ஏமாற்றுவதுடன் அமையாது தம்முடன் பிறந்த சகோதரர்கள் துன்பத்தில் இன்னலுற்று இறந்து போதலைக் கண்டும் இரங்கி உதவாத வன்கண்ணர்களாய் வாழ்கிறார்கள் என்பதை பாரதியார் நினைவூட்டுகிறார். □

## சோழப் பெரும்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்க வேண்டிய இறைகளையும் தாமே தீர்மானித்துக் கொண்டனர். இது பற்றி வைகாவூர் சாசனம் மிகப்பயனுள்ள செய்திகளைத் தருகின்றது.

வரிப்பழுவினைத் தாங்க முடியாத குடியானவர்கள் தாம் பயிரிட்ட நிலங்களையும், குடியிருந்த வீடுகளையும் கைவிட்டு வெளியேறிய செய்திகளைச் சாசனங்கள் தருவதனைக் காணலாம். அதிகரித்துச் சென்ற வரிப் பழுவிலிருந்து விமோசனமோ அல்லது விலக்கோ கிடைக்காமையினால் குடியானவர்கள் தங்கள் தங்கள் ஊர்களை விட்டுச் செல்லும் வழக்கம் அதிகரித்திருந்தது திருச்சி மாவட்டத்தில் இரத்தினகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாவடுதுறை, கலப்பால் ஆகிய ஊர்களை விவசாயிகள் கைவிட்டுச் சென்றமையினைப் பற்றி சாசனங்கள் குறிப்பிடுகின்றன. வரிகள் குறைக்கப்படும் வரை தமது ஊர்களுக்குத் திரும்பச் சென்று பயிர்ச் செய்கையை மீண்டும் மேற்கொள்வதற்கு குடியானவர்கள் மறுத்தனர். இத்தகைய நடவடிக்கைகள் பரவலாகப் பின்பற்றப்பட்டு விவசாயத்தினை மேற்கொள்ளாதபடி குடிமக்கள் செய்யப்பட்டமையினால் அரசின் வருமானம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது அப்போது மத்திய அரசும், உள்ளூர் சபைகளும் வரிகளைக் குறைத்து மக்களைத் திரும்பவும் ஊர்களுக்கு வரவழைப்பதனைவிட வேறு வழி தெரியாது திகைத்தனர்.

திருச்சிமாவட்டத்தில் இரத்தினகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடி தலைஞாயிறு, செய்ஞலூர், கோவில்காடு ஆகிய ஊர்களின் சபைகளும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகப்படியான வரிகளுக்குப் பதிலாக தகுந்த வரிகளை விதிப்பது என்றும், விவசாயிகளைத் துரத்தியவர்களுக்கு எத்தகைய தண்டனைகளை விதிக்கவேண்டும் எனவும் தீர்மானித்து, நிலைமையைச் சமாளிக்க முயன்றனர். சட்டப்படியான வரியிலும் பார்க்க கூடுதலான வரிகளைச் சேகரித்தோர் வரித்தொகையின் ஐந்து மடங்குத் தொகையை தண்டமாக செலுத்த வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.

வரிகளும், குத்தகைகளும் அதிகரித்திருந்தமையால் கோயில் நிலங்களைக் கூட குடியானவர்கள் பயிர்செய்வதற்கு மறுத்து விட்டனர். உதாரணமாக கி. பி. 1172 இலும் பின்னர் 1197 இலும் 2ம் இராஜாதிராசனும் 3 ஆம் குலோத்துங்க சோழனும் செங்கற்பட்டு மாவட்டத்து திருவொற்றியூர் கோவிலுக்குரிய நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்கு இறைகளைக் குறைத்து நிலைமையினை இலகுபடுத்த உதவவேண்டியிருந்தது

தங்கள் உரிமைகளைப் பெறுதற்காகவும், பொறுக்கமுடியாத வரிகளை எதிர்ப்பதற்காகவும் ஒருவகைப்பட்ட ஆரம்ப நிலைச்சக்தியாக மட்டுமல்லாது ‘தீக்குளிப்பு’ போன்ற நடவடிக்கைகளிற் கூட மக்கள் ஈடுபட்டிருந்தனர் எனத்தெரிகின்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் ‘ஜம்பை’ ஊரில் கி. பி. 1012 க்கும் 1044 க்கும் இடையில் வரிசெலுத்தாமையின் பொருட்டு அதிகாரியொருத்தன் தன்னை வருத்தியதற்காகப் பெண்ணொருத்தி நஞ்சுண்டு இறந்தது பற்றி அறியக் கிடக்கின்றது. கி. பி. 1159 இல் தஞ்சாவூர் மாவட்டத்து மேலைப்பாடி என்னுமிடத்தில் நான்கு கோயிற் பணியாளர் தாம் பயிரிட்ட நிலங்களை கோயில் நிலங்களாக மாற்றிக் கொண்டமையை எதிர்த்து தற்கொலை புரிந்து கொண்டனர்.

### அடக்குமுறைகள்

வரிசெலுத்தத் தவறியோர் அரசினால் பலவழிகளில் தண்டனைக்குட்படுத்தப்பட்டனர். பலமணிநேரம் நீரினுள்ளும், சுடு மணலினுள்ளும், அமுக்கியும் புதைத்தும் வைக்கப்பட்டிருந்தனர். வரிசெலுத்தத் தவறியோரது குடிசைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அவ்வாறு தீயிட்டுக் கொளுத்தப்படுவதற்கு முன்னர் குடிசையினுள் காணப்பட்ட விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்தும், நிலை குலைந்த பொருட்களை நாசமாக்கியும் சென்றனர். கி.பி.13 ஆம் நூற்றாண்டினைச்சேர்ந்த ‘நாமக்கல்’ சாசனத்திலிருந்து இக்கருத்தினை உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது. அச்சாசனத்தில் வரும் ‘வெண்கலமெடுத்து மண்கலமுடைத்து’ என்ற வழக்காறனது அக்கருத்தினை நிறுவும்.

நிலத்தினைச் சொத்தாகக் கொண்ட தனிவுடைமையாளருக்கும் அந்நிலத்தினைப் பெற்ற பயிர்ச் செய்கையாளருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்ட காலங்களில், அரசு பெருமளவுக்கு நிலவுடைமையாளருக்குச் சார்பாகவே நடந்து கொண்டுள்ளமையைக் காணலாம். பிராமண நிலச் சொந்தக்காரரான பிராமணரே கூட ஏழைக்குடிமக்களை எதிர்த்தமைபற்றிச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஒரு சாசனத்தின்படி, ஹரிநாராயணன் என்ற பிராமண நிலச் சொந்தக்காரனுடைய வீட்டிற்கு தீ வைத்த குற்றத்திற்காக கவுணியன், ஸ்ரீ கபாடன், ஸ்ரீ கிருஷ்ணன், பொரியுண்டான் ஆகியோர் மீது குற்றம் விதிக்கப்பட்டது பற்றி அறிகின்றோம். 3 ஆம் குலோத்துங்கன் ஒரு கட்டத்தில் மக்கள் உரிமைகளுக்காக ஏற்பட்ட பல எதிர்ப்புக்களை எதிர்நோக்கிய போது சில தடைகளை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டான். அவனுடைய கட்டளை, பிராமணருக்கும் வேளாளருக்கும் எதிராகப் போராட்டம் நடாத்தக் கூடாது என்பதாகும். அதனை மீறியோர் மீது 20000 காசு தண்டமாக விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. 1181இல் பொறிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்து கீழையூர் சாசனத்தின்படி இத்தகவல் எமக்குக் கிடைக்கின்றது. சுயமாக எழுந்த போராட்டம் எவ்வாறு அடக்கப்பட்டது என்பதனை இச்சாசனம் எடுத்துரைக்கின்றது.

### முடிவுரை

விவசாய நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு, தனியார் நிலவுடைமை வளர்ச்சியுற்ற சோழப் பேரரசர் காலத்தில், பயிர்ச்செய்கையானது பெருமளவுக்கு குத்தகை முறையிலேயேமேற்கொள்ளப்பட்டது. குத்தகைக்காரர் தாம் பயிர்ச் செய்கைக்குட்படுத்திய நிலத்துக்கு குத்தகைமாத்திரமின்றி வரியும் செலுத்த வேண்டியிருந்தது. இந்நிலையில் குத்தகை முறையும் வரியும் அதிகரித்துச் செல்ல விவசாயிகளினால் அவற்றைச்செலுத்த முடியாதவொரு நிலையேற்பட்டது. இக்கட்டத்தில் ஏழைவிவசாயிகள் பயிர்செய்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் விவசாயிகள் தத்தமது விவசாய உரிமைகளையும் குடியுரிமைகளையும் நிலைநிறுத்துவதற்காக, பல அரச எதிர்ப்பியக்கங்களில் ஈடுபட வேண்டியவரானார்கள். வரி, குத்தகை ஆகிய இரட்டைப் பழுவின் சுமையினால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு முறையீடு செய்வதற்கு சட்டரீதியான வழிகள் இருக்காமையினாலேயே பிற்பட்ட சோழர் காலத்தில் அரசுக்கெதிரான வரி எதிர்ப்பு முறைகள், இயக்கங்கள் தோற்றம் பெற்றன. □

# இலங்கையில் ஐந்து அரசாட்சிகள்

இலங்கை ஓர் ஒற்றை ஆட்சி நாடென அரசியல் அமைப்புத் திட்டம் கூறுகின்றது. ஆனல் உண்மையில் இலங்கையில் தற்போது எத்தனை அரசுகள் உள்ளன? இலங்கையை ஆள்வது யார்?

தற்போது இலங்கையில் குறைந்தது ஐந்து அரசுகள் உள்ளன? முக்கியமாக ஐந்து ஆயுதப் படைகள் இந்த நாட்டை ஆள்கின்றன. அவை களாவன: 1. ஜே. வி. பி. 2. இந்திய அமைதிப்படை 3. விடுதலைப் புலிகள் 4. ஈ. பி. ஆர். எல். எவ் 5. பிரேமதாஸ அரசு என்பனவாகும். இவை ஐந்தும் தமக்கெனத் தனித்தனி ஆயுதப் படைகளைக் கொண்டுள்ளன.

இந்த ஐந்தில் எந்தவொரு சக்தியினலும் இலங்கை முழுவதையும் தமது தனிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரமுடியாதுள்ளது. உண்மையில் யாராலும் கொண்டுவரவும் முடியாது. ஒன்றரைக் கோடி மக்களும் இவ்வாறு பலராலும் பிய்த்துப் பிடுங்கப்பட்டு ஆளப்படுகின்றனர். அப்படியாயின் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசென்று இலங்கை அரசு மார்தட்ட முடியுமா என்று கேட்கப்படுகிறது.

இவ்வாறு ஐந்து சக்திகளும் ஆட்சி செய்யும் இன்றைய நிலையை யுத்தப் பிரபுத்துவம் என்று வர்ணிக்கலாம். ஆயுதப் படைகளை வைத்திருப்பவர்கள் அனைவரும் எருவரை ஒருவர் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவும் உள்ளனர். அதே வேளை அனைவரும் ஏதோ ஒரு வகையில் அரசியற் பொறிக்குள் அகப்பட்டும் உள்ளனர்.

## வளர்ந்தோர்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின்றி ஆங்காங்கே இருக்கின்றனர். யுனிசெவ் ஆதரவோடு பதினெரு நிலையங்கள் இதற்கென, இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன. வளர்ந்தோர் கல்வி அதிகாரிகள் தன்னிச்சா சங்க உதவியோடு இந்த வேலைகளை ஒழுங்குபடுத்தியுள்ளனர். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது எல்லா அமைச்சுகளுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்கள் தங்களது மாவட்டப்பகுதியில் அதிகாரிகளுக்கு உத்தியோக பூர்வமாக, வளர்ந்தோர் கல்விச் சேவைக்கு உதவியளிக்கவும், ஒத்துழைக்கவும், இணைக்கவும், அறிவித்துள்ளது. சகல மாவட்டமந்திரிகளும், அரசாங்க அதிபர்களும், உதவி அரசாங்க அதிபர்களும், வளர்ந்தோர் கல்வித்திட்டத்தை இலங்கை முழுவதிலும் அமுல் நடத்துவதற்கு, நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர்.

### முடிவுரை

வளர்ந்தோர் தங்களையும், குடும்பங்களையும், தங்கள் வேலைத்தலங்களையும் தாங்கள் வசிக்கும் சமுதாயத்தையும், பொதுவாக நாட்டையும், பாதிக்கக் கூடிய தீர்மானங்கள் எடுத்திருக்கின்றனர்கள். எனவே இவர்கள் சரியான தீர்மானங்களை சரியான அறிவோடும், சரியான விளக்கத்தோடும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியது, அவசியமாகும். புதிய திறந்த பாடசாலைகளின் நோக்கம் பாடசாலையிலிருந்து வெளியேறியவர்களுக்கும், வெளியேற்றப்பட்டவர்களுக்கும், வளர்ந்தோருக்கும் பாடசாலைகளிலுள்ள வளங்களை உபயோகித்தும் ஏனைய அரச தன்னிச்சா சங்கங்களின் ஒத்துழைப்புடன் ஒரு ஒளிமயமான நோக்கத்துடன் கற்கை அநுபவங்களைவழங்குவதாகும். இது உண்மையில் தற்போது நடைமுறையிலுள்ள வளர்ந்தோர் கல்வித்திட்டத்தையும் பாடசாலைக்கு வெளிப்புற கல்வித்திட்டத்தையும் ஒரு நல்ல இறுக்கமான நிலைக்குக் கொண்டு வரும்.

பாடசாலைக் கொத்தணிகளுக்கு அருகாமையில் பாடசாலையை விட்டவர்கள், விடுவிக்கப்பட்டவர்கள், பெற்றோர், ஏனைய வளர்ந்தோர் இந்தக் கொத்தணிப் பாடசாலைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பார்கள். இதனல் இளைஞர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் அவரவர் தேவைகளைப் பொறுத்து, அதற்கு ஏற்றவாறு கற்கை நெறிகள், பயிற்சிகளைத் திட்டமாக்கி செயல்முறைப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். இதற்கு வேண்டிய நிர்வாக அமைப்பு தேசிய வளர்ந்தோர் கல்விச் சேவையில் இப்பொழுதே உண்டு. இச்சேவையை சட்டபூர்வமாக அங்கீகரித்து, அதற்கு தொடர்ச்சியையும் நிரந்தரத்தன்மையையும் வழங்குவது மிக அவசியமாகின்றது. □

## இந்திய...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாலும்,மேடை இசை நிகழ்ச்சிகளை நன்கொடைகளை வழங்குவதற்கே பயன்படுத்தினர்.

எடின்பரோ விழாவிலும், ஐ. நா. விலும், பாரிஸில் இந்திய விழாவின் ஆரம்ப நாளிலும் நடைபெற்ற இவரது இசை நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

சென்னை சங்கீத அக்கடமியின் தலைமைப் பதவி வகித்த முதலாவது பெண்ணுகவும் இவர் விளங்கினர். இந்தியாவிலும்; வெளிநாடுகளிலும் இவருக்குக் கிடைத்த விருதுகள் எண்ணிறந்தவை. ஆனல், இவை பற்றி அலட்டிக்கொண்டவராக எம்,எஸ். இருக்கவில்லை. இவரது ஆரம்பகால இசைத்தட்டொன்றில் வெளிவந்த, "பட்டம் பதவி பெறப் பாடவில்லை" என்ற பாடல் இங்கு நினைவுகூரத் தக்கது.

1974 ஆம் ஆண்டு 'மகசேசே' விருதைப் பெற்றுக் கொண்ட எம். எஸ். அதில் கிடைத்த பெருந்தொகைப் பணத்தை இந்தியக் கலாசாரத்தை மேநிலைப்படுத்த உழைக்கும் நிறுவனத்திற்கும் ஏழைகளுக்கான வைத்திய சாலைக்கும் இந்துக் குருகுல கல்விச்சாலைக்கும் அன்பளிப்புச் செய்தார்.

ஆழமான சமய ஈடுபாடுடைய எம். எஸ். கடவுள் வணக்கத்தில் மணிக்கணக்காக ஈடுபடுவார். வீட்டிலென்றாலும் வெளியிலென்றாலும் நிகழ்ச்சிகள் அதிகமிருந்தாலும் இவரிதனைக் கைவிடுவதில்லை. இவரது தேவைகள் மிகச் சாதாரணமானவை. பழக்க வழக்கங்கள் வைதிகமானவை. எப்பொழுதும் புதிது புதிதாக அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவராக இருப்பார். உயர்வுக்காக சதா தேடல் புரிந்து கொண்டிருக்கும் கலைஞரிவர். எப்பொழுதும், எவ்விடத்தும், பயிற்சி பண்ணியவாறு இருப்பது இவரது வழக்கம்.

குன்றாத குரல் வளமும் குன்றாத இளமையும் கொண்டு ஐம்பது வருடங்களுக்கும் மேலாக கர்நாடக இசையுலகை வசப்படுத்தி வைத்திருக்கும் இரு பெண்களுக்குத் தாயான எம். எஸ். சென்னையின் நாகரிகம் அதிகமற்ற ஒரு பகுதியில் அமைந்துள்ள அடக்கமான பழைய வீட்டில் வாழ்ந்து வருகிருர். □

## கோளறு...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூவி அழைத்தனர். அவன் மேலும் நீருக்குள் இறங்குகிருன். சாரனை கழற்றி தலையில் முண்டாசு கட்டிக் கொள்கிருன். திருநீறு பூசிக் கொள்கிருன். ஏதோ முணுமுணுக்கிருன். அவர்கள் கைகளை விசி விசி அவனைப் பயமுறுத்த எத்தனிக்கின்றனர். மல நாற்றம் வீசுகிறது. மல நாற்றமா அல்லது பிணம் கருகும் நெடியா? அது மார்கழி மாதப்பனியா, அல்லது ஊர்கள் எல்லாம் சுட்டெரிக்கப்படும் புகையா? எனக்கு மூச்சு முட்டுகிறது. ஒன்றுமே தெளிவாகத் தெரியமாட்டேன் என்கிறது.

மிகப் பிரயாசைப்பட்டு கண் விழித்தேன். உடல் வியர்த்திருந்தது. மிகத் தாகமாக இருந்தது. நீர்க்குவளை இருந்த பக்கம் கைகளைத் துழாவி, அதை இருட்டில் நிலத்தில் உருட்டி உடைத்தேன்.

அடுத்த நாள் காலையில், தேவனின் நண்பன் ஒருவன் என்னைத் தேடி வந்தான். தேவனைக் கண்டாயா, என வினவினன்.

மேலும் சிலநாட்கள் கழித்து இன்னெருவன் வந்தான். இரண்டொரு நாள் கழித்து இரண்டு பேர் வந்து தேவனை விசாரித்தார்கள்.

அதற்குப் பிறகு நான் தேவனைக் காணவேயில்லை!

அத்துடன் நான் வீடு மாறிவிட்டேன். பேய்கள் பற்றி நான் மிகவும் அஞ்சுகிறேன். நடு இரவுகளில் நிம்மதியின்றி தூக்கத்துக்கு போகிறேன். நடுஇரவில் விழித்தெழுந்து தேவனை நினைவுபடுத்த முயற்சித்தவாறு, நெடுநேரம் புகைபிடிக்கிறேன். □

## நிகழ்வுகள்

### 29 - 8 - 89 செவ்வாய்

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் — சேருவில, கந்தளாய், அம்பாறைப் பகுதிகளில் — ஜே.வி.பியினரைத் தேடும் முயற்சியை இலங்கைப் படைகள் மேற்கொண்டன □ பண்டாரகமவில் 17பேரின் சடலங்களும், வெலிகமவில் 8 பேரின் சடலங்களும் கண்டு பிடிக்கப்பட்டன □ நேற்று முதல் ஒருவாரத்துக்கு நாடு முழுவதும் வேலைநிறுத்தம் ஒழுங்கு செய்துள்ள ஜே.வி.பி இயக்கம், அரசாங்க ஊழியர் அலுவலகம் செல்லலாம். ஆனல் அங்கு வேலைசெய்யக் கூடாதென இன்று அறிவித்தது □ இன்று நடைபெற்ற நல்லூர்த் தேர்த்திருவிழாவின் போது இரண்டு பெண்களின் சங்கிலிகள் திருட்டுப் போயின □

### 30 - 8 - 89 புதன்

கடந்த சில மாதங்களாக தமிழ் மாணவர்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகியிருப்பது குறித்து, பல்கலைக்கழக இணைப்புக்குழு கவலை தெரிவித்தது □ ஜே.வி.பி யின் வேலை நிறுத்தக் கோரிக்கையையடுத்து, இன்றும் கொழும்பில் வங்கிகள் மூடப்பட்டிருந்தன □ இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசியம்பற்றி ஈ.பி.ஆர்.எல் எவ் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரான க. பிரேமச்சந்திரன் அறிக்கையொன்றை வெளியிட்டார் □ படுகொலைகளையும் வன்செயல்களையும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கோரி மல்வத்தைப்பீட மகாநாயக்க தேரோ பகிரங்க அழைப்பொன்றை விடுத்தார் □ 'அக்டோபர் 10 புரட்சி அமைப்பு' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றின் அறிக்கை வெளியாகியது □ மனித உரிமைக்காகப் போராடிய சட்டத்தரணி காஞ்சன அபயபாலாவின் படுகொலை குறித்து விசாரணை நடைபெற வேண்டுமென்று, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது □

### 31 - 8 - 89 வியாழன்

யாழ்.மாவட்டத்தில் செயலிழந்திருக்கும் பாடசாலைகளை மீண்டும் இயங்கச் செய்வதற்கு, பல தரப்பிலும் முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகச் செய்தி வெளியானது □ மாவிட்டபுரம் அரசடியில் காலை 10 மணியளவில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றது □ ஆவரங்காலிலும் மோதல் இடம்பெற்றது. வயோதிபர் ஒருவர் மரணமானர், சில வீடுகளும், கடைகளும் சேதமடைந்தன □ நவிண்டில்,வியாபாரிமூலை ஆகிய இடங்களில் மீண்டும் படைமுகாம்கள் அமைக்கப்பட்டன. அவற்றை அண்டிய மக்கள் மீண்டும் இடம்பெயரத் தொடங்கினர் □ மதவாச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தாக்குதலில் கொல்லப்பட்டார் □ நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண அனைத்துக்கட்சி மாநாடொன்றை நடத்த ஜனதிபதி தீர்மானித்துள்ளதாக, அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்தி வெளியிட்டார்□ கொழும்பு தொலைத் தொடர்புத் திணைக்களத் தலைமையகத்தில் குண்டு ஒன்று வெடித்தது □

### 1 - 9 - 89 வெள்ளி

யாழ். அரசாங்க அதிபராக எஸ். தர்மபாலன் பதவியேற்ருர் □ ஐ. தே. க. அதிருப்தியாளர்களுடன்ஏனைய எதிர்க் கட்சிகள் இணைந்து, கூட்டு அரசு அமைக்க முயல்வதாக செய்தி ஏஜன்சிகள் செய்தி வெளியிட்டன □ யாழ். ஆனைப்பந்தியில் இடம் பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் □ சித்தங்கேணி — சங்கானைப் பகுதி வயல் வெளிப்பக்கமாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதில் வயல் வேலை செய்தவர்கள் சிதறி ஓடினர்; ஒருவர் தவறி கிணற்றினுள் வீழ்ந்தார் □ மிருசுவில், உசன், விடத்தற்பளைப் பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ வட — கிழக்கு மாகாணத்தில் தேவை எனக் கருதும் வரை இலங்கைப்படை இருக்குமென, ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார் □ போலிச் சாராய விற்பனையை ரெலோ தடைசெய்தது □

### 2 - 9 - 89 சனி

அரசமைப்பை உடனே திருத்தி பொதுத்தேர்தலை நடத்துவதன் மூலமே நாட்டில் அமைதியை ஏற்படுத்தலாம் என, அமைச்சர் லலித் தெரிவித்தார் □ வன்செயல்களில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் அவற்றைக் கைவிட வேண்டுமென, எதிர்க்கட்சிகளின் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது □ கொற்றுவத்தையிலும், கொடிகாமத்திலும் மோதல்கள் இடம் பெற்றன □ பருத்தித்துறையில் பலத்த தேடுதல் இடம் பெற்றது □ முல்லைத்தீவில் கள்ளப்பாடு, சிலாவத்தைப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்களும், பின்னர் தேடுதலும் மேற்கொள்ளப்பட்டன □

### 3 - 9 - 89 ஞாயிறு

கந்தரோடையில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று நடைபெற்றது □ 700 ஜவான்கள் திருகோணமலையிலிருந்து இந்தியா திரும்பினர் □ அந்நியப்படைகள் இந்த மண்ணில் நிரந்தரமாக இருக்க முடியாது; ஆனல் அவை புறப்படுவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டிய கடமைகள் முடிக்கப்பட வேண்டும் என்று, முதலவர் அ. வரதராஜப் பெருமாள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். வடக்கு — கிழக்கில் தொடர்ந்தும் மின் தடை இருந்தால் மாற்று நடவடிக்கை எடுக்கப்படுமென, முதல்வர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் சொன்னர் □

### 4 - 9 - 89 திங்கள்

அமைதிப்படை விடுக்கும் உத்தரவை வட — கிழக்கு அரச அதிபர்கள் ஏற்கத் தேவையில்லை என, அரசு சுற்று நிரூபம் அனுப்பியது □ தென் பகுதியில் 21 சடலங்கள் மீட்கப்பட்டன □ அமெரிக்க செனற் சபையின் வெளியுறவுக் குழுவின் பிரதம ஆலோசகர் கோல்பிரெய்த்துடன், ஜனதிபதி பிரேமதாச பேச்சுக்கள் நடத்தினர் □ ஒரு வார வேலை நிறுத்த நிலைமைகளின் பின், கொழும்பு நகரம் வழமைக்குத் திரும்பியது □

திசை
THISAI

# அமைதிக்கான பாதை:
# இனப்பிரச்சினைக்கான தீர்வே

## திசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

### மாயையை விட்டு உண்மையை அறிவோம்

'சிவில் நிர்வாக விவகாரங்களில் இந்திய அமைதிப் படையின் பணிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டாம்' என்று வட — கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்களுக்கு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது,

அரசு பெரிய தோரணையோடு இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இவ்வுத்தரவைக் குறிப்பிட்ட அரசாங்க அதிபர்கள் சிரமேற்கொள்வார்கள் என்பதும் நிச்சயம்.

ஆனால் இதை இவர்கள் நடைமுறைப் படுத்தும் சக்தி பெற்றிருக்கிறார்களா என்பதே கேள்வி.

இதுநாள் வரை வட — கிழக்குப் பகுதியின் சிவில் நிர்வாகம் என்பது அரசாங்க ஊழியரின் சம்பளம் வழங்கல், ஒய்வூதியம் வழங்கல், கூட்டுறவுக் கடைகள் மூலம் நுகர்வுப் பொருட்கள் வழங்கல் என்பதாகவே இருந்து வந்துள்ளது. இவை தவிர்ந்த சிவில் நிர்வாகம் என்பது — அது பன்முகப்பட்ட திணைக்களங்களினூடாக பன்முகப்பட்ட நிலையில் தொழில்படுவது — அரசாங்கம் நினைத்த நோக்கில் நடைபெறவில்லை. அனைத்தும் ஓர் முறையான நிர்வகிப்பிலிருந்து விலகிய ஓர் தழம்பிய நிலையிலேயே இயங்கி வந்துள்ளன.

இந்தக் குழம்பிய நிலையில், அரசாங்கம் இத்தகைய கட்டளைகளைப் பிறப்பிப்பதன் மூலம், தான் தனது நாட்டின் இறைமையைப் பேணிக்காப்பாற்றுவதாக நினைக்கிறது. ஆனால் இது வெறும் மாயையே. இந்த மாயையிலிருந்து விடுபட்டு சிவில் நிர்வாகம், ராணுவ நிர்வாகம் என்னும் இரட்டைத் தன்மைக்குள் கிடந்து அரசு இழுபறிப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அடிப்படைத் தீர்வில் அரசு இறங்க வேண்டும்.

இந்திய அமைதிப்படை விலகலை செயல்படுத்த ஆற்றல் அற்றிருக்கும் அரசு, சிவில் நிர்வாகத்தை அதன் ஆளுமையிலிருந்து தவிர்க்கும்படி கட்டளையிடுவதன் மூலம் எந்தவித பலனையும் எதிர்பார்க்க முடியாது.

இனப் பிரச்சினைக்கான தீர்விலேயே இதற்குரிய பலனும் பலமும் கிடைக்கும்.

## மாற்று நடவடிக்கை

தமிழீழ மாணவர்களே! கடந்த காலங்களாக தமிழீழ மாணவர்கள் இராணுவ நடவடிக்கைகளினால் உடல் ரீதியாகவும், உளரீதியாவும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பது தெரிந்ததே.

அதிலும் அண்மைக்காலமாக மாணவர்கள் கொல்லப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் தான் எமது உயிருக்கு உத்தரவாதம் கோரி எமது பாடசாலை பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்தினோம். அதற்கு உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பும் கிடைத்தது.

ஆனால் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரும், பாடசாலையதிபர்களும் தமது உயிருக்கே உத்தரவாதமற்ற நிலையில், எமது உயிருக்கு எப்படி உத்தரவாதம் தரமுடியுமென கைவிரித்து விட்டார்கள். அத்தோடு மாணவர்கள் கொல்லப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்தவண்ணம் உள்ளது.

இந்நிலையில் பாடசாலை பகிஷ்கரிப்பை நிறுத்தி நாம் மாற்று நடவடிக்கையிலிறங்க வேண்டியவர்களாக உள்ளோம். இதற்கு உங்கள் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம். எமது மாற்றுப் போராட்ட நடவடிக்கை விரைவில் அறிவிக்கப்படும்.

மேற்கண்டவாறு தமிழீழ மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

## பகிஷ்கரிப்புக்கு ராஜீவ் ஆதரவு

தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ள பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக தென்னாபிரிக்க தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது. இத்தேர்தற் பகிஷ்கரிப்புக்கு தமது அரசு பூரண ஆதரவளிக்கும் என்று ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

கடந்தசில மாதங்களுக்கு முன்பு ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன், நமீபியாப் பிரச்சினை பற்றி ஹராரேயில் நின்று கருத்து வெளியிடுகையில், நமீபியாவில் நேர்மையான தேர்தல் நடைபெற வேண்டுமென்றும், பொய்யான தேர்தல் மூலம் பொம்மை அரசு உருவாக இடம்கொடுக்கக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று எல்லோரும் கோருகிறார்கள். தாம் சமாதானத்திற்காகப் பாடுபடுவதாக அனைவரும் கூறிக்கொள்கிறார்கள். இப்போது ஐந்து எதிர்க்கட்சிகள் இணைந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான யோசனைகளை முன்வைத்துள்ளன.

அரசியற் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்து ஜனாதிபதி முறைமையைக் கலைத்து, ஓர் இடைக்கால அரசை உருவாக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். பிரச்சினையை — இந்த அமைதியின்மைக்கு அடிப்படையான காரணியை — எங்கோ ஓடவிட்டுவிட்டு ஐ.தே.க. ஆட்சியைமாற்றுவதால்மட்டும் அமைதியைக் கொண்டுவந்துவிடலாம் என்று, இவர்கள் கற்பனை செய்கிறார்கள்.

இன்றைய அமைதியின்மைக்கான அடிப்படைக் காரணமே இன ஒடுக்குமுறையிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. இனப் பிரச்சினையின் பெயராற்தான் இந்திய இராணுவம் இங்கு வந்தது. இனப்பிரச்சினையின் பெயராலும், அதனடிப்படையிலான இந்திய இராணுவத்தின் பெயராலும்தான் இன்றைய ஆயுதம்தாங்கிய அரசியல்நிகழ்கின்றது. எனவே அமைதியைக் கொண்டுவர வேண்டுமென்றால் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வை, எதிர்க்கட்சிகளும் ஆளும்கட்சியும் முதலில் முன்வைக்க வேண்டும்.

இந்த எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முக்கியம் பெறவில்லை. தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு முன்வைக்கப்படாமல், இலங்கையில் அமைதியை யாராலுமே கொண்டுவர முடியாது.

எனவே அமைதிக்கான பாதை இனப்பிரச்சினையின் தீர்விற்தான் உள்ளதே தவிர, வானத்திலிருந்து எதனையும் இறக்குவதனால் அமைதிகாண முடியாது. இனியாவது தென்னிலங்கை அரசியல் வாதிகள் இந்த உண்மையை உணர்வார்களா?

சர்வகட்சி மாநாடோ அல்லது வேறெந்த மாநாடோ கூட்டப்பட்டாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதவரைக்கும், பழைய குருடி கதவைத் திறவடி கதையாகவே இது முடியும்.

## சிறுமி நரபலி ராமராவ் ஆட்சியில்!

புதிதாகக் கட்டிய தனது சினிமாத் தியேட்டருக்கு கூடிய வசூல் கிடைக்க வேண்டும் என்று விரும்பி, ஒரு தியேட்டர் உரிமையாளர் ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தியை அதற்கு நரபலி கொடுத்த கொடூரச் சம்பவம், ஆந்திரப் பிரதேஷில் இவ்வாரம் நிகழ்ந்துள்ளது.

ஒருவரின் வளர்ப்பு மகளை 4000ரூபா கொடுத்து வாங்கி, அந்தக் கொடியவர்கள் நரபலி கொடுத்துள்ளனர்.

இந்த நரபலி கொடுத்தவனையும், பிள்ளையை விற்றவனையும், இதனோடு சம்பந்தப்பட்ட ஏனையோரையும் இந்தியச் சட்டம் தண்டிக்குமா? திரைப் படத்தில் கடவுள் வேஷம் போடும் ஆந்திர முதல்வர் ராமராவ், இந்தக் கொடுமைக்கெதிராக தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவாரா?

இந்தியா ஒரு புறம் அண்டவெளிப் பிரயாணத்தில் முன்னேறுகிறது; மறுபுறம் நரபலியால் பின்னிறங்குகிறது!

## முற்பணப் படிவம் தனிச் சிங்களத்தில்

ஆசிரியர் மூன்று மாதச் சம்பள முற்பணம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கு யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி நிலையத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதைச் சமாளிக்கும் வகையில் முற்பணம் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்களில் ஒரு பிரதி கொத்தணி அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முற்பணத்துக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர் சம்பந்தப்பட்ட படிவங்களை போட்டோ பிரதி எடுப்பதற்கு ரூபா 20/= வரை செலவாகிறது. மேற்படி படிவங்கள் 'வவுனியா கல்விக் கோட்டத்தில் போதிய அளவு உள்ளனவாம். வீண் செலவினத்தைத் தவிர்ப்பதற்கு முற்பணம் தேவைப்படும் ஆசிரியர்களில் சிலர் வவுனியாக் கோட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து படிவங்களை எடுத்து முற்பணத்துக்கு விண்ணப்பிப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால், இப் படிவங்கள் தனிச் சிங்களத்தில் மாத்திரம் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பு முற்பணத்துக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். இன்று அதிகாரப்பரவலாக்கத்துக்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிபர், கொத்தணி அதிபர் ஆகியோரின் அத்தாட்சியுடன் முற்பணத்துக்கான விண்ணப்பத்தைக் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டுமாம்.

## பனை அபிவிருத்திச் சபையில் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை

பனை அபிவிருத்திச் சபைக்கு 1987இல் ஒன்பது பேரைக் கொண்ட பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டது. காலப்போக்கில் வெற்றிடங்கள் ஏற்பட்ட போதெல்லாம் அந்த இடங்களுக்கு தகுதியானவர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாகப் பனை அபிவிருத்திச் சபையில் ஏற்பட்ட மூன்று வெற்றிடங்கள், இதுவரை காலமும் நிரப்பப்படவில்லையாம். சபைப் பணிப்பாளர்களில் ஒருவர் நீண்டகாலமாக வெளிநாட்டில் வசித்து வருவதாலும், இருவர் மரணமாகியதாலும் இந்த இடங்கள் காலியாகவுள்ளன.

தவிர, பதவி வழியாக பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் கூட்டுறவு உதவி ஆணையாளரும் சபைக் கூட்டங்களில் பங்கு கொள்வதில்லையாம். பணிப்பாளர் சபையில் பனைவளத்தைக் கொண்ட மன்னார் மாவட்டம் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் ஒரே ஒரு அரச ஸ்தாபனம் பனை அபிவிருத்திச் சபையே என்பது, குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஜே வி.பி. பலவீனமடைந்து வருவதாக செய்திகள் வெளிவரும் இக்கட்டத்தில், மேலும் தீவிர நடவடிக்கையில் பிரேமா நம்பிக்கை வைப்பதாகத் தெரிய வருகின்றது.

எப்படியோ பெரும் இரத்த வெள்ளத்தைத்தான் வேதனையுடன் அங்கு எதிர்பார்க்கலாம்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 8-9-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட
egistered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.